




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 207 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை (07.04.2023) ஹிஜ்ரி 1444, ரமழான் - 15, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50







## 7,000 பஸ்கள் இன்று முதல் சேவையில்



நா. தினுஷா

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு இன்றிலிருந்து (07) எதிர்வரும் 18ஆம் திகதிவரை விசேட போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் இந்த விசேட போக்குவரத்து சேவைக்காக இம்முறை 7 ஆயிரம் அரச மற்றும் தனியார் பஸ்கள் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிரண்டா தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (06) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பஸ்கள் மற்றும் ஏனைய தனியார் பிரிவுக்குரிய பஸ்களை விசேட போக்குவரத்து சேவைக்காக இணைத்துக்கொண்டுள்ளோம். குறிப்பாக நாளையிலிருந்து (இன்றிலிருந்து) எதிர்வரும் 18ஆம் திகதி வரை இந்த போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்படும். முதற்கட்டமாக இன்றிலிருந்து (07) 15ஆம் திகதி வரை கொழும்பிலிருந்து வெளி மாகாணங்களுக்கு விசேட பஸ் போக்குவரத்து சேவையை வழங்க எதிர்பார்த்துள்ளோம். 02 பக்கம்

# அடிபணிந்தது அரசு!

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை சமர்ப்பிப்பதில் திடீரென பின்வாங்கல்

நமது விசேட செய்தியாளர்

பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை மேலும் சில வாரங்களுக்கு தாமதப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சர்வதேச நிறுவனங்கள், எதிர்க்கட்சிகள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட உள்நாட்டு அமைப்புகள், சிவில் பிரதிநிதிகள் அரசுக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்ததன் காரணமாக சட்டமூலத்தை சமர்ப்பிப்பதிலிருந்து அரசு பின்வாங்கியதாக அறியமுடிந்தது.

இந்த சட்டமூலத்தை கடந்த 04ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் விடுமுறை காரணமாக குறித்த சட்டமூலம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடுவதற்கு உள்ள தடைகளை கருத்திற்கொண்டு அதனை சமர்ப்பிக்கவில்லையென நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகளின் அமைப்புகள் மற்றும் பல்வேறு சிவில் அமைப்புகள் விடுத்த கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கும் அரசாங்கம் என்ற ரீதியில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சட்டமூலத்தை இம்மாத இறுதியில் அல்லது மே மாத முதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. மேலும், இந்தச் சட்டமூலமானது நாட்டின் ஜனநாயகத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையுமென உள்நாட்டு சிவில் அமைப்புகள் சுட்டிக்காட்டியிருந்தன.

அரசியலமைப்பின் 121ஆவது பிரிவின் கீழ் சட்டமூலம் ஒன்றுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் நிலையியற் கட்டளை 55(02)இன் பிரகாரம் நீதிமன்றத்தின் தீர்மானம் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட பின்னரே சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்கு நிர்ணயிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிவில் அமைப்புகளின் கருத்துகள் அவசியம்

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் தாரக்க தெரிவிப்பு

நா. தினுஷா

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் சமர்ப்பித்து அதற்கான அனுமதியைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் அதே சந்தர்ப்பத்தில் சட்டத்துக்குத் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள முடியுமென்று நம்புவதாகவும்... 02 பக்கம்

## 40 எரிபொருள் நிலையங்களை இடைநிறுத்த அமைச்சு தீர்மானம்



### கியூ.ஆர். முறையை பின்பற்றாததால் நடவடிக்கை

நா. தினுஷா

எரிபொருள் விநியோக நடவடிக்கைக்காக அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கியூ.ஆர். ஒதுக்கீடுகளை தொடர்ந்து பின்பற்றாத 40 எரிபொருள்... 02 பக்கம்

## தனியார் கல்வி நடவடிக்கைகளை 24வரை தற்காலிகமாக நிறுத்துக!

### நோன்பு காலத்தை சுட்டிக்காட்டி காத்தான்குடி நகரசபை கோரிக்கை




(எம்.பஹத் ஜுனைட்)

காத்தான்குடி நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் தனியார் கல்வி நடவடிக்கைகளை இம்மாதம் 24ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு நகரசபை கோரிக்கை முன்வைத்துள்ளது.

காத்தான்குடி நகரிலுள்ள தனியார் பிரத்தியேக கல்வி நிறுவனங்களில் நோன்பு நாட்களில் காலை 6.00 மணி தொடக்கம் மாலை 5.30 வரை வகுப்புகள் மற்றும் பரீட்சைகளை நடத்துவதாகவும் இதன் காரணமாக பிள்ளைகள் நோன்புடன் மயக்கமுற்ற நிலைமையில் சோர்வடைந்து வீடுகளுக்கு வருவதாகவும்... 02 பக்கம்

## பிரேத அறையில் இடப் பற்றாக்குறை

### அடையாளந்தெரியாத சடலங்களை ஏற்க மறுக்கிறது களுபோவில வைத்தியசாலை



கே. சுபானி

களுபோவில போதனா வைத்தியசாலைக்கு வெளியிடங்களிலிருந்து கொண்டுவரப்படும் அடையாளந்தெரியாத மற்றும் உறவினர்களற்ற சடலங்களை ஏற்றுக்கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. 02 பக்கம்

## ஊழலுக்கு எதிரான சட்டமூலம் வர்த்தமானியில்

ஊழலுக்கு எதிரான சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

சொத்துகளுடன் தொடர்புடைய இலஞ்சம், ஊழல் மோசடி குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை கண்டறியவும் விசாரணை செய்யவும் வழக்கு தொடரவும் சுயாதீன ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கான சந்தர்ப்பம் இதனூடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை விஸ்தரிப்பதும் மக்களுக்கான தெளிவூட்டலை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழலுக்கு எதிரான சட்டமூலத்தை கொண்டுவருமாறு சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கப்ராலுக்கு எதிரான முறைப்பாடு நிராகரிப்பு

ம. சசிதரன்

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டை நிராகரிப்பதாக கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று (06) தீர்ப்பளித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகக் கடமையாற்றியபோது அரசாங்க நிதியை துஷ்பிரயோகம் செய்ததாக குறித்த தனிப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அஜித் நிவார்ட் கப்ராலின் சட்டத்தரணிகள் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனைகளை ஏற்று கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவல இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். 02 பக்கம்

## இந்து பாரம்பரியத்தின் இருப்புக்கே ஆபத்து!

### இலங்கை தொடர்பில் புலம்பெயர் அமைப்புகள் இந்திய பிரதமருக்கு கடிதம்


இலங்கையில் இந்து பாரம்பரியத்தின் இருப்புக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதாக புலம்பெயர் அமைப்புகள் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளன.

ஏழு புலம்பெயர் அமைப்புகள் இணைந்து இந்தக் கடிதத்தை எழுதியுள்ளன. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் தனது இராணுவத்தின் உதவியுடன் இலங்கையின் வடக்கு, கிழக்கில் இந்து கலாசாரம், பாரம்பரியம், கோவில் ஆகியவற்றின் இறுதிக் கோட்டையை இலக்குவைக்கிறது. 02 பக்கம்

## தகவல்கள் கண்காணிப்பா?

### பாதுகாப்பு அமைச்சு மறுப்பு




பல்வேறு சமூக ஊடகத் தளங்கள் மற்றும் தொலைபேசி உரையாடல்கள் மூலம் பகிரப்படும் தகவல்கள் கண்காணிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படும் செய்திகளை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது. 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...

நோன்பு துறக்கும் இப்தார் நிகழ்வும் அரசியலாகிட்டுது பாருங்கோ.. அரசியல்வாதிகள் இல்லாத இப்தார் நிகழ்வுகளை பொதுவெளியில காணமுடியேல்ல..!



## ஆர்ப்பாட்டத்தை ஏன் கலைத்தீர்கள்?

### பொலிஸ் மா அதிபரிடம் விளக்கம் கோரியது மனித உரிமைகள் ஆணைக்குழு

நா. தினுஷா

கொழும்பு, லிப்டன் சுற்றுவட்டாரத்தில் கடந்த 03ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை கலைத்தமை தொடர்பில் தீவிர கவனஞ்செலுத்தி வருவதாகவும், இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் இலங்கை மனித உரிமைகள்... 02 பக்கம்

## பணிப்பாளர் தாக்கப்பட்டமைக்கு சட்ட நடவடிக்கை அவசியம்

JOINT APPAREL ASSOCIATION FORUM
SRI LANKA APPAREL

கட்டான, ஹல்பேயிலுள்ள ஆடைத் தொழிற்சாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பாதுகாப்பு அதிகாரி மீது தனிநபர்கள் குழுவொன்று கடந்த மார்ச் 30ஆம் திகதி கொடூரமான தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதோடு, பொறுப்புள்ள அதிகாரிகள் இதுகுறித்து பாரபட்சமற்ற விசாரணை மற்றும் விரைவான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஓமானிய பிரஜையான முகாமைத்துவப் பணிப்பாளரின் இல்லத்திற்குள் அத்துமீறி நுழைந்த குழுவொன்று மேற்கொண்ட இந்த சட்டவிரோதமான தாக்குதல்... 02 பக்கம்

### உஷ்



ஜனாதிபதி ரணில் சித்திரை புதுவருட விடுமுறையை கழிக்க நுவரெலியா செல்கிறார்.

விடுமுறைக்கு சென்றாலும் அங்கு தமிழ் அரசியல்வாதிகள் சிலரையும் ரணில் சந்திக்கவுள்ளதாக தகவல்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் அறிக்கையை நாடாளுமன்றத்தில் ஏப்ரல் இறுதியில் சமர்ப்பிக்கவுள்ளார் ரணில். அதற்கு முன்னர் அமைச்சரவையை மாற்றவும் தீர்மானித்துள்ளாராம் அவர்.

# 17ஆம் திகதி வரை மலையகத்துக்கு 30 விசேட புகையிரத சேவைகள்

## ரயில்வே திணைக்களம் அறிவிப்பு

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு மத்திய மலைநாட்டுக்கான புகையிரத சேவைக்கு அதிக கேள்வி எழுந்துள்ளதாகவும் 04ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதிவரை மத்திய மலைநாட்டுக்கு 30 விசேட புகையிரத சேவைகள் வழங்கப்படவுள்ளதாகவும் ரயில்வே மேலதிக பொது முகாமையாளர் வீ.எஸ்.பொல்வத்தகே தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய நாட்களில் மத்திய மலைநாட்டு பிரதேசங்களில் புகையிரத சேவைக்கான அதிக கேள்வி நிலை எழுந்துள்ளது. அதற்கமைய, தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு மக்களின் நலன் கருதியும், சுற்றுலாத்துறையை கருத்தில் கொண்டும் 30 விசேட புகையிரத சேவைகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம். இந்த 30 புகையிரத சேவைகளையும் கடந்த 4ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 17ஆம் திகதி வரை முறையாக வழங்க வேலைத்திட்டங்களை வகுத்திருக்கிறோம்.

குறிப்பாக, கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் மாலை 7.30 மணிக்கு வெளியேறி மறுநாள் காலை 05.05 மணிக்கு வந்தடையும் வகையில், கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரையில் ஏப்ரல் 04, 06, 12 மற்றும் 16ஆம் திகதிகளில் விசேட புகையிரத சேவைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் முற்பகல் 6.30 மணிக்கு புறப்படும் புகையிரதம் பிற்பகல் 05.05 மணியளவில் பதுளையை சென்றடையும் வகையில், ஏப்ரல் 05ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நாளாந்த புகையிரத சேவையையும் திட்டமிட்டுள்ளோம். 14ஆம் திகதி இந்த புகையிரத சேவை இருக்காது. மீண்டும், பதுளையிலிருந்து கொழும்பை நோக்கி வரும் பயணிகளுக்காக பிற்பகல் 5.20 மணிக்கு பதுளையிலிருந்து வெளியேறி மறுநாள் முற்பகல் 3.50 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடையும் வகையில் புகையிரத சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த புகையிரத சேவை 06, 12 மற்றும் 16ஆம் திகதிகளில் இயங்கும்.

இதற்கு மேலதிகமாக பதுளையிலிருந்து காலை 7.00 மணிக்கு புறப்பட்டு மாலை 4.50 மணிக்கு கொழும்பை வந்தடையும் வகையில் விசேட புகையிரத சேவையொன்றும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த புகையிரத சேவை 6ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதி வரையில் 11 சேவைகளை வழங்க திட்டமிட்டுள்ளோம். 14ஆம் திகதி இந்த புகையிரத சேவை இயங்காது. இவற்றுக்கு மேலதிகமாக சாதாரண நாளாந்த புகையிரதங்களான பொடிமெனிகே, உடரட மெனிகே, 07 இலக்க புகையிரதம் மற்றும் இரவு தபால் புகையிரதம் என்பன நாளாந்தம் சேவையிலிருக்கும்.

கரையோர வீதிகளில் பயணிக்கும் அலுவலக மற்றும் நாளாந்த புகையிரதங்களுக்கு மேலதிகமாக 15 மற்றும் 16ஆம் திகதியில் மாலை 7.20 மணிக்கு புறக்கோட்டையிலிருந்து புறப்பட்டு காலி வரையில் பயணிக்கும் வகையில் விசேட புகையிரத சேவை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் புகையிரதம் மாலை 9.30 மணிக்கு காலியை சென்றடையும். இதேவேளை, நேற்று பெலியத்தையிலிருந்து மருதானை வரையில் விசேட புகையிரத சேவையொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கு மேலதிகமாக அநுராதபுரம் வரையில் இரு புகையிரத சேவைகள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. 09 மற்றும் 16ஆம் திகதிகளில் இந்த புகையிரதம் சேவையில் இருக்கும். அநுராதபுரத்திலிருந்து 12.30 மணிக்கு வெளியேறி பெலியத்தவுக்கு மாலை 8.40 மணிக்கு வந்தடையும். மீண்டும் பெலியத்தையிலிருந்து அநுராதபுரத்துக்கு 08 மற்றும் 15ஆம் திகதிகளில் இரு விசேட புகையிரத சேவை வழங்கப்பட்டுள்ளது. பிரதான வீதிகளில் பயணிக்கும் புகையிரதங்களில் ஆசன ஒதுக்கீட்டு வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் இந்தோனேசிய தூதுவர் டெவி டொபின்க் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று (06) அமைச்சில் இடம்பெற்றது. இருதரப்பு உறவுகள் மற்றும் பொருளாதார, அரசியல் நிலைமைகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

# அதிபர், ஆசிரியர், சிற்றூழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்க ஹட்டனில் நடமாடும் சேவை







**நுவரெலியா நிருபர்**

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில் நடமாடும் சேவை ஒன்று ஹட்டன் கல்வி வலய பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் ஏற்பாட்டில் நேற்று (06) ஹட்டன் ஸ்ரீபாத கல்லூரியின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த ஹட்டன் கல்வி வலய பணிப்பாளர் பி.ஸ்ரீதரன், தற்பொழுது நாட்டில் இருக்கின்ற பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டும் அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் தங்களுடைய பல்வேறு குறைபாடுகளையும் கண்டிக்கு சென்று தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையே காணப்பட்டது.

இதன் ஊடாக அவர்கள் போக்குவரத்து செலவினம் காலதாமதம் உட்பட பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக எனது கவனத்திற்கு கொண்டு வந்தனர். ஒரு வலய கல்விப் பணிப்பாளர் என்ற ரீதியில் அவர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு என்னுடையதாகும்.

இது தொடர்பாக மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்ததை தொடர்ந்து அவர்களுடைய முழுமையான ஒத்துழைப்புடன் ஒரு நாள் நடமாடும் சேவை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நடமாடும் சேவையில் கண்டி கல்வித்திணைக்களம் மத்திய மாகாண கல்வி அமைச்சு ஊடாக பெற்றுக் கொள்ளக்கூடிய அனைத்து சேவைகளையும் பெற்றுக் கொள்ளும் வகையில் தனித்தனியான சேவைப்பகுதிகள் அமைக்கப்பட்டு அதற்கான தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தங்களுடைய கோவைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள், சிற்றூழியர்களின் நிரந்தரமாக்கல், அவர்களுடைய பதவு உயர்வு உட்பட இன்னும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட 150 பாடசாலைகளை சேர்ந்த 400 அதிபர்கள், 3 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள், 100க்கும் மேற்பட்ட சிற்றூழியர்கள் இதன் மூலம் நன்மை பெற்றுள்ளனர்.

இந்த நடமாடும் சேவை சிறந்த முறையில் நடைபெறுவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கிய மத்திய மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் அனைவரும் எங்களுடைய வலயத்தின் சார்பாக நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ளவிரும்புகின்றேன் எனவும் ஹட்டன் கல்வி வலய பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இந்து பாரம்பரியத்தின்...

1948ஆம் ஆண்டின் பின்னர் 1800 ஆலயங்களையும் பாரம்பரியங்களையும் அழித்த பின்னர் இது இடம்பெறுகின்றது.

இலங்கையின் வட பகுதியில் அதிகளவு மதிப்புக்குரியதாக காணப்படும் கீரிமலை பகுதியில் காணப்பட்ட ஐந்து நூற்றாண்டு கால வரலாற்றை கொண்டுள்ள ஆதிசிவன் ஆலயம் இராணுவ ஆக்கிரமிப்பு என்ற போர்வையில் அழிக்கப்பட்டுள்ளதை ஆழ்ந்த கரிசனையுடனும் அவசரத்துடனும் நாங்கள் உங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின்போது இராணுவம் அந்த பகுதியை மிக நீண்டகாலம் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த பின்னர் பொதுமக்களை அங்கு செல்வதற்கு அனுமதித்த வேளையே இது தெரியவந்தது.

கோவில் இருந்த பகுதியில் அதனை அழித்துவிட்டு ஜனாதிபதி மாளிகையொன்றை கட்டியுள்ளனர்.

இதன் மூலம் இந்துக்கள் இறந்தவர்களுக்கான இறுதி மரியாதைகளை முன்னெடுக்கும் பகுதியின் புனிதத்தை சீர்குலைத்துள்ளனர்.

2015இல் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்த பகுதிக்கு அருகில் உள்ள நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு விஜயம் மேற்கொண்டு பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இலங்கையில் உள்ள இந்து பாரம்பரியம், கலாசாரத்தின் இறுதிச் சின்னமாக காணப்படுகின்றவற்றை அழிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இலங்கை அரசாங்கம் செயற்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தை பொருளாதார நெருக்கடியிலிருந்து இந்தியாவும், சர்வதேச சமூகமும் பிணையெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளபோதிலும் இது இடம்பெறுகின்றது.

புனிதப் பொருட்களை அவமதிக்கும் இந்த செயல் இடம்பெற்ற சில காலத்துக்குள் கிழக்கு திருகோணமலையில் உள்ள இந்துக்களின் புனித பகுதியான கன்னியா நீரூற்றை அனுராதபுர நகரத்துடன் தொடர்புடையது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதனை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. முல்லைத்தீவு குருந்தூர் மலையில் உள்ள ஆதி சிவன் ஐயனார் கோவில் அழிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டம் வெடுக்குநாறி மலையில் உள்ள ஆலயத்தின் பல விக்கிரகங்கள் களவாடப்பட்டன.

இலங்கைக்கான சர்வதேச உதவிகளை நாங்கள் வரவேற்கும் அதேவேளை, இலங்கையில் இந்து பாரம்பரியம், கலாசாரம் ஆகியவற்றை அழிக்கும் தனது நிகழ்ச்சி நிரலுக்கு இலங்கை அரசாங்கம் இந்த உதவியை பயன்படுத்த நிதி வழங்கும் சமூகம் அனுமதிக்கக் கூடாது என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்து மத கலாசாரம் அழிக்கப்படுவதை தடுப்பதற்காக இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையை அமைக்க வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை, இலங்கைக்கு நிதி வழங்கும் சமூகம் வலியுறுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

## 40 எரிபொருள் நிலையங்களை...

நிலையங்களை இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனம் ஆகியவற்றுடன் நேற்று (06) இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் அடுத்த 08 வாரங்களுக்கான எரிபொருள் திட்டம், சுத்திகரிப்பு செயற்பாடுகள் மற்றும் பண்டிகை காலத்தில் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்த பேச்சுவார்த்தையின்போது QR ஒதுக்கீடு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. QR ஒதுக்கீட்டு முறையை பின்பற்றாத 40 நிலையங்களை இதன்போது அடையாளம் கண்டோம். அந்த நிறுவனங்களை இடைநிறுத்தவும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

அதேபோன்று, சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களும் களஞ்சிய தாங்கியின் கொள்ளளவில் 50 சதவீத நிமிடத்தை பராமரிக்க வேண்டும்.

இதேவேளை, எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான எரிபொருள் தாங்கிகளுக்கும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ஜி.பி.எஸ். கண்காணிப்பு முறை பொருத்தப்படும். இந்த திட்டத்தில் தனியார் துறைக்கு சொந்தமான எரிபொருள் தாங்கிகள் குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்று சுட்டிக்காட்டினார்.

## 7,000 பஸ்கள் இன்று முதல்...

15ஆம் திகதியிலிருந்து 18ஆம் திகதி வரை வெளி மாகாணங்களிலிருந்து கொழும்புக்கு பயணிக்கும், பயணிகளுக்காக விசேட போக்குவரத்து சேவை வழங்கப்படும்.

மேல் மாகாணத்தை மையப்படுத்திய வகையில் இந்த விசேட வேலைத்திட்டத்துக்கமைய, 7000 அரச மற்றும் தனியார் பஸ்களை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கு மேலதிகமாக 300 வரையிலான தனியார் பஸ்கள் அவசர காலப்பகுதியில் பயன்படுத்துவதற்காக இணைத்துக்கொண்டுள்ளோம். அதற்கமைய, பெஸ்டியன் மாவத்தையிலிருந்து 3000 வரையிலான தனியார் பஸ்களும், இலங்கை போக்குவரத்து சபைக்குரிய 4000 வரையிலான பஸ்களும் இதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, பயணிகளின் நலன் கருதி நடமாடும் பரிசோதனை அதிகாரிகளையும், மேலதிக சேவை அதிகாரிகளையும் இந்த வேலைத்திட்டத்தில் சேவைக்காக இணைத்துக் கொண்டுள்ளோம். பெஸ்டியன் மாவத்தை பஸ் வலயத்தில் கொழும்பு மாநகர சபையுடன் இணைந்து அங்கிருக்கும் உணவகங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தவும், பொது மக்களுக்கு மேலதிக நீர் விநியோகத்தை பெற்றுக்கொடுக்கவும், சுகாதார வசதிகளை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, பொலிஸாரின் உதவியுடன் பாதுகாப்பையும் அதிகரித்துள்ளோம். கடற்படை, இராணுவத்தினரின் உதவியையும் கோரியுள்ளோம். புத்தாண்டின் பின்னரான காலப்பகுதியில் வெளி மாகாணங்களிலிருந்து கொழும்புக்கு பயணிகளை அழைத்து வருவதற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. மாகும்புற, கடவத்த, கடுவளை ஆகிய பஸ் நிலையங்களிலிருந்து அதிவேக நெடுஞ்சாலை பஸ்கள் பயணிக்கின்றன. மேற்குறிப்பிட்டது போன்று அதிகளவு நெடுஞ்சாலை பஸ் சேவைகள் இடம்பெறும் என்றும் சுட்டிக்காட்டினார்.

## சிவில் அமைப்புகளின்...

இந்த சட்டமூலம் தொடர்பில் சிவில் அமைப்பினரின் கருத்துகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேசத்திடம் ஐந்து வருடங்களுக்கு முன்னர் தற்போது நடைமுறையிலிருக்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவதாக வாக்குறுதி அளித்திருந்தோம். அதற்கான புதிய சட்டமூலம் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் புதிய சட்டமூலத்திலுள்ள குறைப்பாடுகள் குறித்து மக்கள் பேசுகின்றார்கள். எனவே, இந்த சட்டமூலம் தொடர்பில் சிவில் அமைப்பினருடனும் கலந்துரையாட வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கிறது.

குறிப்பாக பயங்கரவாதம் என்ற சொல் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் வெவ்வேறு கருத்துகளை முன்வைத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த சட்டமூலத்தை அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் சமர்ப்பித்து அதற்கான அனுமதியை பெறும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதே சந்தர்ப்பத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள முடியுமென்றும் நான் நம்புகிறேன்.

ஆளுந்தரப்பு, எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் இடம்மாறுவது குறித்து பேசுவதற்கு மாறாக, பொருளாதார மறுசீரமைப்பு, அரசியல் மறுசீரமைப்பு என்பது இலகுவான விடயமல்ல. அதனை புரிந்துக்கொள்ள வேண்டும். கொள்கை அடிப்படையில் இதனை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் என்ற வேறுபாடின்றி அதற்கான பலத்தை ஜனாதிபதிக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றார்.

## பிரேத அறையில்...

இதுகுறித்து கல்கிஸை மற்றும் நுகேகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் நேற்றுமுன்தினம் (05) எழுத்துமூலம் வைத்தியசாலை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

களுபோவில போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வெளி இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட 36 சடலங்களில் அடையாளம் தெரியாத 28 சடலங்கள் 14 மாதங்களாக பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாது கைவிடப்பட்டுள்ள காரணத்தினால் மேற்படி சடலங்களை ஏற்றுக்கொள்வதை வைத்தியசாலை நிர்வாகம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படும் அடையாளம் தெரியாத சடலங்கள் தொடர்பில் பொலிஸ் ஊடாக உறவுகளை தேடியறிந்து பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். எனினும், பொலிஸாரின் அலட்சியத்தால் இவ்வாறு சடலங்கள் தேக்கமடைகின்றன.

களுபோவில போதனா வைத்தியசாலை பிரேத அறையிலுள்ள 36 குளிரூட்டிகளில் இரண்டு குளிரூட்டிகள் உடற்பாகங்களை பாதுகாத்து வைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 34 குளிரூட்டிகளிலும் 14 மாதங்களாக அடையாளம் காணப்படாது தேக்கமடைந்துள்ள 28 சடலங்களும் உள்ளன. எஞ்சிய 6 குளிரூட்டிகளும் அன்றாட சேவைகளை வழங்குவதற்கு போதுமானதாக இல்லை என வைத்திய நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிமன்ற உத்தரவு மற்றும் வேறு காரணங்களுக்காக அடையாளம் காணப்பட்ட சடலங்கள், நாளொன்றுக்கு 8 அல்லது 10 வீதம் கொண்டுவரப்படுகின்ற நிலையில், உயிரிழந்தவரின் உறவினர்கள் தூரப் பிரதேசங்களிலிருந்து வருவதற்கு ஒன்றிரண்டு நாட்களாவதால் அவை அடக்கம் செய்யப்படுவதற்காக 'ட்ரொலி'களிலேயே வைக்கப்படுகின்றன.

இதுதொடர்பில் பலமுறை கல்கிஸை மற்றும் நுகேகொடை உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அந்த சந்தர்ப்பங்களில் மாத்திரம் மேற்குறிப்பிட்ட அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்தனர். எனினும், அதன்பின்னர் நடவடிக்கைகளை கைவிட்டுவிடுவதால் மீண்டும் அடையாளம் காணப்படாத சடலங்கள் பிரேத அறையில் நிறைந்துள்ளன.

இதனால் அடையாளம் தெரியாத சடலங்களை ஏற்றுக்கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தகவல்கள் கண்காணிப்பா?...

வாட்ஸ்அப், பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக ஊடக தளங்களில் தொலைபேசி உரையாடல்கள் பதிவு செய்யப்படுவதாகவும் பாதுகாப்பு அமைச்சினால் கண்காணிக்கப்படுவதாகவும் அறிக்கைகள் பரப்பப்படுகின்றன. இது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பரவி வரும் செய்தி முற்றிலும் தவறானது என பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

## கப்ராலுக்கு எதிரான...

குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதற்கு போதுமான உண்மைகளை முன்வைக்க முறைப்பாட்டாளர் தவறிவிட்டதாக குறிப்பிட்டார்.

இந்த தனிப்பட்ட முறைப்பாடு தென் மாகாண முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோனினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தனியார் கல்வி...

இரவு வணக்கங்களில் ஈடுபடுவது சிரமமாக இருப்பதாகவும் பெற்றோர்களாலும் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினாலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடும் வெப்பமான காலநிலை நிலவுவதால் காத்தான்குடி நகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் தரம் 1 முதல் தரம் 10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் நேற்று 06ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்தி மாணவர்கள் மார்க்கக் கடமைகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நகரசபை விடுத்துள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆர்ப்பாட்டத்தை...

ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு, லிப்டன் சுற்றுவட்டாரத்தில் கடந்த 03ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை கலைத்தது தொடர்பில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியிடப்பட்ட அறிக்கைகளுக்கமைவாக, 1996, இலக்கம் 21 ஐ கொண்ட இலங்கை மனித உரிமைகள் சட்டத்தின் 14ஆவது உறுப்புரையின் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கலைக்கும் நோக்குடைய விடயம் தொடர்பிலான அறிக்கையொன்றை, எதிர்வரும் 10ஆம் திகதிக்குள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## பணிப்பாளர் தாக்கப்பட்டமைக்கு...

மேற்கொள்ளப்பட்டதினால் முகாமைத்துவப் பணிப்பாளரும் பாதுகாப்பு உத்தியோகத்தரும் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவு நிறுவனமான இந்தத் தொழிற்சாலையினால் 300க்கு மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"ஆடைத் தொழிற்றுறையின் பாரிய அமைப்பாக, இதுபோன்ற வன்முறைச் செயல்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். சட்ட அமுலாக்க அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு, சட்டத்தினை நிலைநிறுத்தவும், இந்தத் தாக்குதலைத் தூண்டியவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாங்கள் எமது அனுதாபத்தை தெரிவிப்பதோடு, இந்த விவகாரம் நாட்டின் சட்டங்களின்படி அமைதியான முறையில் தீர்வுகாணும் வரை பொறுமையோடு காத்திருக்கும்படியும் கேட்டுக்கொள்கிறோம்." என கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலுக்கு அருகில் சென்று ஆய்வுகளை நடத்துவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கோரிக்கை

## சுற்றாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு


© Parliament of Sri Lanka


© Parliament of Sri Lanka


© Parliament of Sri Lanka


© Parliament of Sri Lanka

இலங்கை கடற்பரப்பில் 2021ஆம் ஆண்டு விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் எஞ்சியுள்ள பாகங்களுக்கு அருகில் சென்று ஆய்வுசெய்து இழப்பீடுகளை மதிப்பீடு செய்வதற்கான மாதிரிகளைப் பெற்றுக்கொள்ள நிபுணத்துவக் குழுவுக்கு அவசியமான வசதிகளைப் பெற்றுக்கொடுக்குமாறு சுற்றாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (நாரா) ஆகியவற்றுக்கு அறிவித்தார்.

சுற்றாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் அஜித் மான்னப்பெரும தலைமையில் 2023.04.04ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நீதி அமைச்சர் (கலாநிதி) விஜேதாச ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர். அத்துடன், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் காப்புறுதி நிறுவனத்தின் பிரதிநிதிகள் (P&I Club), சுற்றாடல் உள்ளிட்ட பாதிப்பை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் உறுப்பினர்கள், சட்ட மா அதிபர் திணைக்களம், நிதி அமைச்சு, கடற்றொழில் அமைச்சு போன்றவற்றின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

கப்பலுக்கு அருகில் அல்லது கப்பலுக்குள் செல்வதற்கு முடியாமல் இருப்பது சுற்றாடலுக்கு ஏற்பட்ட சேதத்தை அளவிடுவதற்குத் தடையாக இருப்பதாக சுற்றாடல் மற்றும் ஏனைய சேதங்களின் முழு அளவை கணக்கிடுவதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் உறுப்பினர்கள் இங்கு குறிப்பிட்டனர். ஆபத்தானது எனக் காண்பித்து கப்பலுக்கு அருகில் செல்வது தடுக்கப்பட்டாலும், கடற்படையினர் மற்றும் விமானப்படையினரின் ஒத்துழைப்பைப் பெற்று வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இதற்கமைய கப்பலுக்கு அருகில் சென்று இதற்கான மாதிரிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பது நஷ்டஈடு கோரி தாக்கல் செய்யப்படும் வழக்கிற்குப் பாதிப்பாக அமையலாம் என்பதால் இதற்கான வசதிகளை விரைவில் ஏற்படுத்திக்கொடுக்குமாறு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை ஆகியவற்றுக்கு குழுவின் தலைவர் பணிப்புரை விடுத்தார்.

குறித்த கப்பலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. வழக்குத் தாக்கல் செய்வதற்கு இன்னமும் 45 நாட்கள் மாத்திரமே எஞ்சியிருப்பதாகவும், ஏற்கனவே அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கு அமைவாக சிங்கப்பூரில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவது பாதகமானதாக அமையலாம் என சூழலியலாளர்கள் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர் கருத்துத் தெரிவித்தனர்.

இதுவரை விபத்து தொடர்பில் 6.2 பில்லியன் அமெரிக்க டொலர் நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்வது தொடர்பான நிபுணர்கள் குழுவின் அறிக்கை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் ஊடாக சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும், வழக்குத் தாக்கல் செய்வது சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பு என்றும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி அசேல ரக்காவ இங்கு தெரிவித்தார்.

இந்த அறிக்கைக்கமைய குறிப்பிட்ட நஷ்டஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுவதாக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதற்கமைய வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்க 06.04.2023ஆம் திகதி நீதி அமைச்சர் தலைமையில் விசேட கூட்டமொன்றை நடத்துவது என்றும், இதில் சட்ட மா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட உரிய சட்டத்தரணிகள் கலந்துகொள்வது என்றும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், இந்தச் சம்பவத்துக்கான நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்வது தொடர்பான செயற்பாடுகளின் முன்னேற்றத்தை ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினரை சுற்றாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு ஏப்ரல் 25ஆம் திகதி மீண்டும் சந்திப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான அகில எல்லாவல, நாலக பண்டார கோட்டேகொட, வருண லியனகே, உபுல் மகேந்திர ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் பங்குனி மாதம் 24ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்:** தடைப்பட்டிருந்த பயணத்தால் நன்மைகளை அடைவீர்கள், மனதை மகிழ்விக்கும் பல சம்பவங்கள் நடந்தேறும்.

**ரிஷபம்:** சுயதொழில் மூலம் நன்மைகள் லாபங்கள் உண்டு. உடல், மன நோய்களால் சற்று தொந்தரவுகள் உண்டு.

**மிதுனம்:** வீணான மனக் கவலைகளை விட்டு அமைதியுடன் இருங்கள், பயணங்களை குறைத்துக்கொள்வது நல்லது.

**கடகம்:** யாரையும் நம்பி புதிய தொழில் வியாபாரங்களில் இறங்க வேண்டாம், வாகனப் பயணங்களில் கவனம் வேண்டும்.

**சிம்மம்:** உங்கள் தேவைக்காக பணம் கிடைக்கும், மனத் துணிவுடன் சிங்கத்தைப்போல் நிமிர்ந்து நிற்பீர்கள்.

**கன்னி:** யாருக்கும் வாக்களிக்காதீர்கள், கடன் கொடுப்பது, பெறுவது சில பிரச்சினைகளை ஏற்படுத்தும், எச்சரிக்கை வேண்டும்.

**துலாம்:** மனதில் ஒருவித பய உணர்வு படபடப்பு தோன்றும், வீண் டென்ஷன் வேண்டாம், பொறுமையாக இருங்கள்.

**விருச்சகம்:** தேவையற்ற பயணங்கள், அதனால் செலவுகள் இவை இன்றைய நாளில் தவிர்க்க முடியாதவை.

**தனுசு:** தொழில் வியாபார அதிர்ஷ்டங்களை அடைவீர்கள், நினைத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** நீங்கள் தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள் உயர்வுகள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

**கும்பம்:** நீங்கள் உங்கள் உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கா விட்டால் சல சிக்கல்களை சந்திக்க வேண்டிவரும்.

**மீனம்:** மௌனம் காப்பது, மனதை ஒரு நிலைப்படுத்துவது, ஆன்மீக சிந்தனை இவையெல்லாமே இன்றைய நாளில் மருந்து போன்றதே.

**திதி** : பிரதமை மு.ப.10.21 வரை பின் துவிதியை

**நட்சத்திரம்** : சித்திரை பி.ப.1.33 வரை பின் சுவாதி

**யோகம்** : சித்த யோகம் (சுப காரியம் நன்மை இல்லை)

**வார சூலை** : மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப. 6.05 - 7.05 மணி வரை

**ராகு காலம்** : 10.35 – 12.05 மணி வரை

**எமகண்டம்** : 3.05 - 4.35 மணி வரை

**குளிகை** : 7.35 - 9.05 மணி வரை

**சந்திராஷ்டமம்** : மீன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : ரோஹிணி, அத்தம், திருவோணம், மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை செயற்றிட்ட முன்னேற்றங்களுக்கு உலக வங்கிப் பிரதிநிதிகள் பாராட்டு



இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றங்களுக்கு உலக வங்கிப் பிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை செயற்பாட்டுத் திட்டம் தொடர்பில் உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற இறுதிச் சுற்றுப்பேச்சுவார்த்தை, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் நேற்று (06) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றபோதே உலக வங்கிப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு பாராட்டு தெரிவித்திருந்தனர்.

பாராளுமன்ற வரவு-செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவுதல், அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்தல், நலன்புரி கொடுப்பனவுகளை வழங்கும் முறைமை, சமூகப் பதிவு போன்ற இலங்கையின் அபிவிருத்திக் கொள்கைக்கான செயற்பாட்டுத் திட்டத்தை முழுமையாக்குவதற்கு அவசியமான எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அவற்றுக்கு அவசியமான கால எல்லை என்பன தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை முன்னெடுப்புகளுக்கு உலக வங்கி வழங்கும் ஒத்துழைப்புக்கு பாராட்டுத் தெரிவித்த சாகல ரத்நாயக்க, இந்த வேலைத்திட்டத்தை சாத்தியமாக்கிக்கொள்வதற்கு அனைவரினதும் ஒத்துழைப்புகளை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

உலக வங்கியின் இந்நாட்டுக்கான முகாமையாளர் சியோ கன்தா உள்ளிட்ட உலக வங்கிப் பிரதிநிதிகளும் பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க உள்ளிட்ட அதிகாரிகளும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டிருந்தனர்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வாபஸ் பெறுவதானால் எழுத்துமூலம் அறிவியுங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை



பொதுமக்களின் எதிர்ப்பை கருத்திற்கொண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வாபஸ் பெற முடிவு எடுக்கப்பட்டாலும், குறித்த அந்த முடிவில் தனக்கு நம்பிக்கை இல்லை எனவும், இதற்கு முன்னரும் மக்களால் எதிர்க்கப்பட்ட சட்டமூலங்களை அரசாங்கம் வாபஸ் பெற்றாலும், பின்னர் தமது பெரும்பான்மையைப் பயன்படுத்தி நிறைவேற்றிக்கொண்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எனவே, அரசாங்கம் இந்த பங்கரவாதச் சட்டத்தை வாபஸ் பெறுவதாக இருந்தால், அது தொடர்பில் தெளிவான எழுத்துமூல அறிவிப்பை வெளியிட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

இதனால் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தினால் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மனித உரிமைகள் கூட மீறப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு விசேட கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.





கம்பளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பங்குனி உத்தர மஹோற்சவ தேர்த் திருவிழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றன. இதன்போது அம்பாள் தீர்த்தோற்சவத்திற்காக மகாவலி கங்கைக்கு உலா வருவதனையும் சிறுமிகளின் முளைப்பாலிகை ஊர்வலம் மற்றும் கும்மி நடனத்தினையும் படங்களில் காணலாம். (படங்கள் - கலஹா செய்தியாளர்)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

## ஓமல்பே சோபித தேரர் தெரிவிப்பு

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த சட்டமூலத்தினூடாக, ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுமோ என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. இதனூடாக அரசியல்வாதிகளின் தேவைகளுக்காக பொலிஸார் பயன்படுத்தப்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. எதிர்காலத்தில், இந்த சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாக ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொடர்பில், நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாட சென்றிருந்தபோது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பது உண்மையாகும். ஆனால், ஜனநாயகம் தொடர்பில் இருக்கும் எதிர்பார்ப்புகளும், அபிலாஷைகளும் மார்ச் மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தினால் சிக்கலுக்குள்ளாகியுள்ளன. மக்களின் ஜனநாயக உரிமையை முழுமையாக முடக்கும் வகையில் சர்வாதிகாரம் கொண்ட ஏற்பாடுகள் இந்த பங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் தெளிவாக இருக்கின்றன. இந்தச் சட்டத்தின் பிரகாரம் மக்களின் செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்படுகின்றது. குறித்த செயற்பாடுகளின் பாரதூர தன்மை குறித்து தெளிவான வார்த்தைப்பிரயோகம் இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதுடன், ஆனால், பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவரினால் பாரதூர தன்மை தொடர்பில் தீர்மானம் எடுக்கமுடியும்.

பொலிஸ் ஆணைக்குழு செயற்படாது, அதன் தலையீடின்றி பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவருக்கு வரையறையற்ற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசியல்வாதிகளின் தனிப்பட்ட தேவைகளுக்காக பொலிஸாரை செயற்படுத்த முடியும் என்பது அண்மைக்கால சம்பவங்களில் தெளிவாக உறுதியாகிறது. ஆகவே, இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தினூடாக நாட்டில் இருக்கும் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுமோ என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அரசாங்கத்தால் முன்வைக்கப்படும் எதிர்ப்புகளினால், இந்தச் சட்டத்தை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது ஏற்புடைய தீர்மானம் என்றாலும், இந்தச் சட்டமூலத்தை மதிப்பீடு செய்து அமைச்சருக்கு தெளிவுபடுத்தலை வழங்க தீர்மானித்துள்ளோம் -என்றார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சட்டங்களுக்கோ சாசனங்களுக்கோ அமைய இயற்றப்படவில்லை

## சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவிப்பு

(மன்னார் நகர் நிருபர்)




பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்பது ஐ.நா. மனித உரிமை சட்டங்களுக்கோ சாசனங்களுக்கோ அமைய இயற்றப்படவில்லையென சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நேற்று (6) வியாழக்கிழமை காலை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் தற்போது கொண்டு வருவதில்லை எனவும், தாமதிப்பதாகவும் நீதியமைச்சர் கூறியிருக்கின்றார். தற்போது அது நல்ல விடயம் என்றுதான் நாம் கூற வேண்டும்.

இந்தச் சட்டமானது இரகசியமான விதத்தில்தான் இயற்றப்பட்டது.

பல உரிமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் இவ்வாறான சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முதல் அச்சட்டம் இயற்றப்படும்போது மக்களின் அபிப்பிராயங்கள், சிவில் சமூகங்கள், சட்டத்தரணிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், நிபுணர்கள் ஆகியோரின் அபிப்பிராயங்களையும் எடுத்துதான் சட்டத்தை இயற்ற வேண்டும்.

அரசாங்கமானது மக்கள், நிபுணர்கள், சட்டத்தரணிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என்ன கூறுகிறார்கள் என்று செவிமடுத்து, முக்கியமாக, எமது அரசியலமைப்பிலுள்ள உரிமைகள் மீறப்படாமல், இலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் மத்தியில் கடமைகள் உள்ளன.

ஏனெனில், இலங்கை பல்வேறு ஐ.நா. சாசனங்களில் கைச்சாத்திட்டுள்ளது. அதன் அடிப்படையில் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு கடமை இருக்கிறது. இந்த சாசனங்களிலுள்ள உரிமைகளை இலங்கையில் நடைமுறைப் படுத்துவதற்கும், பாதுகாப்பதற்குமாகும்.

இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்பது ஐ.நா. மனித உரிமை சட்டங்களுக்கோ சாசனங்களுக்கோ அமைய இயற்றப்படவில்லை.

ஆகவே, அரசாங்கம் இதனை பாராளுமன்றத்துக்கு கொண்டுவராமல், தற்போது இதை நிறுத்தி இவ்வாறான சட்டம் இயற்றுவது என்றால், வெளிப்படையான முறையில் நான் முன்னர் குறிப்பிட்ட அத்தனை பேரையும் இணைத்து அவர்களின் அபிப்பிராயங்களை எடுத்து சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களுக்கு ஏற்றதான ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஏப்ரல் 07ஆம் திகதி, வெள்ளிக்கிழமை


## தொடரவேண்டும் பிரிட்டனின் அழுத்தம்!

இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் நில அபகரிப்புகளுக்கு தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் தெற்காசிய இராஜாங்க அமைச்சர் அஹ்மட் பிரபு இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பிரித்தானிய அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் என்ன விடயங்களை முன்வைத்துள்ளது என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

பேரவையில், 51-1 தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான சர்வதேச முயற்சிகளை ஐக்கிய இராச்சியம் வழிநடத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இது, இலங்கை தொடர்பாக அறிக்கையிடுவதற்கும் கடந்தகால மனித உரிமை மீறல்களின் ஆதாரங்களை பாதுகாப்பதற்கும், எதிர்கால பொறுப்புக் கூறல் செயல்முறைகளில் பயன்படுத்துவதற்கும், மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு உதவியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி மாதம் இலங்கையின் உலகளாவிய காலமுறை மீளாய்வின்போது வடக்கு மற்றும் கிழக்கில் காணி அபகரிப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியதன் அவசியம் உள்ளிட்ட வலியுறுத்தல்களை பிரித்தானியா வழங்கியது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் தாயகமான வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் நோக்கத்துடனும், அவர்களின் வாழ்வாதாரம், இருப்பு மற்றும் அடையாளம் ஆகியவற்றை இல்லாமல் செய்யும் நோக்கத்துடனும் இலங்கை அரசாங்கங்களினால் கடந்த 70 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவந்த இனவாத அடிப்படையிலான நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தற்போது மிகவும் தீவிரமடைந்துள்ளன.

தமிழர் நிலங்களை பாதுகாப்பதற்கும் இழந்த நிலங்களை மீட்பதற்கும் இயலாத அளவுக்கு இலங்கையில் தமிழ் மக்களின் நிலைமை மிகவும் ஆபத்தானதாகவும் கடினமானதாகவும் மாறியிருக்கின்றது. நிலத்துடன், வாழ்வையும், 3000 வருடங்களுக்கு மேற்பட்ட அடையாளத்தையும் மிகவும் வேகமாக தமிழ்ச்சமூகம் இழந்து வருகின்றது. இந்நிலையில், பிரித்தானியாவின் மேற்கண்ட நிலைப்பாடு தமிழர்களுக்கு சற்று ஆறுதல் தருவதாக உள்ளதெனக் கூறினால் மிகையாகாது.

தமிழ்ச் சமூகம் பாரிய யுத்த அழிவிலிருந்து இன்னமும் மீளவில்லை. அழிக்கப்பட்ட ஆலயங்கள், இறந்தவர்களுக்கான உணர்வுபூர்வமான அஞ்சலிகள் என்பவற்றுக்கு இன்னமும் இடமில்லை.

சிங்கள மயமாதல் தமிழரின் கலாசார நிகழ்ச்சிகளிலும், சமய, சமூக நிகழ்ச்சிகளிலும், பொருளாதார செயற்பாடுகளிலும், பொதுசேவை ஆட்சேர்ப்பிலும், கல்வித்திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் வரலாறு திரிபுபடுத்தப்பட்டு சிங்கள, பௌத்த வரலாறாக மாற்றி எழுதப்படுகின்றது. அது எதிர்கால சந்ததிகளுக்கு பாடப் புத்தகங்களில் புகுத்தப்பட்டும் வருகின்றது.

தமிழர்கள் வசிக்கும் பிரதேசங்களில், பௌத்த சமயத்தை பின்பற்றாதவர்கள் உள்ள இடங்களில் சிங்களத்தின் பௌத்த கோவில்களும், அதன் கட்டமைப்புகளும் இடம்பெறுவது தமிழர்கள் இருப்புக்கு மிகவும் ஆபத்தானது என்பதை பலரும் காலங்காலமாக சுட்டிக்காட்டி வருகின்றனர். தமிழர்தம் தொன்மை வாய்ந்த கலை, பண்பாடு, சமயம் என்பன சிதைக்கப்பட்டு மறைக்கப்படும் அபாயம் அதிகரித்து வருகின்றது.

தமிழ் மக்கள் தம் உரிமைகளை நிலைநாட்டுவதில் பெரும் தியாகம் செய்தவர்கள். ஆனாலும், எந்த இனத்தின் மீதும் எந்த சமயத்தின் மீதும் மேலாதிக்கம் செலுத்தாது ஏனைய மக்களுடன் சமாதான சகவாழ்வு வாழ விரும்புபவர்கள். வடக்கு - கிழக்கில் தாமாக வந்து குடியேறி தமது கலை, பண்பாடு, சமய அனுஷ்டானங்களை மேற்கொள்ளும் எல்லோருடனும் சகோதர உறவுடன் வாழவே விரும்புகின்றனர். ஆனால், தம் தாயகத்தில் அரசியல், பொருளாதார ரீதியாக அல்லது சமூக ரீதியாக சுற்றிவளைத்து தனிமைப்படுத்தி பலவீனப்படுத்தும் பௌத்த மேலாதிக்க மூலோபாயத்தின் அடிப்படையில் எடுக்கும் எந்த நடவடிக்கையிலும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இருக்கிறது.

காலங்காலமாக தமிழர்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்படுதலும், அங்கு சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் பௌத்த விகாரைகள் அமைத்தல் போன்ற செயற்பாடுகளும் தொடர்ச்சியாக ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே சமயம் இராணுவம் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் உள்ள தமிழர்களின் அடையாளங்களும் திட்டமிடப் பட்டு அழிக்கப்படுகின்றன.

இந்த பின்னணியில், தமிழர்கள் எதிர்நோக்கும் நில அபகரிப்புகளுக்கு தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ள பிரிட்டன், இந்த விடயத்தில் தொடர் கவனம் செலுத்தி ஆக்கபூர்வமான தீர்வொன்றை காண வலியுறுத்த வேண்டும். தமிழர்களின் அவாவும் அதுவே.

# நேர்த்திக்கடனுக்காக பெண் வேடம்!

## ஆண்கள் கொண்டாடும் விநோத திருவிழா


ஷாலி





இந்தப் படங்களில் ஒன்று, சமூக வலைத்தளங்களில் ''நம்புங்கள், இவர் ஆண்தான்...'' என்ற தலைப்புடன் வைரலாகிக்கொண்டிருக்கிறது. இவர் திருநங்கையாக இருப்பாரோ என்ற சந்தேகம் பலருக்கு எழுந்தாலும் இவர் ஆண்தான்... ஆணேதான்! பெயர் ஷாலி.

ஷாலி இப்படி பெண் வேடம் போடக் காரணமாக அமைந்திருப்பது, கேரள மாநிலம் கொல்லம் நகருக்கு அருகில் இருக்கும் சவராவில் அமைந்திருக்கும் ஸ்ரீ கொட்டன் குளங்கராதேவி கோயில்.

மார்ச் 25 அன்று நடந்து முடிந்த இந்தக் கோயிலின் உற்சவத்தில்தான் ஷாலி பெண் வேடத்தில் வந்தார்.

ஷாலி மட்டுமல்ல, நூற்றுக்கணக்கான ஆண்கள் இந்தத் திருவிழாவில் பெண் வேடத்தில் கலந்துகொண்டார்கள். ஒவ்வோர் ஆண்டும் மலையாள மீனம் மாதத்தின் (மார்ச் இரண்டாம் பகுதியில் வரும்) 10ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் சூரிய அஸ்தமனமான பிறகு இந்தக் கோயில் திருவிழா, செண்டை மேளம் மற்றும் வாணவேடிக்கைகளுடன் நடக்கிறது.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பகுதியில் ஆடு, மாடு மேய்க்கும் சிறார்கள், வழியில் கிடைத்த தேங்காயை உரிப்பதற்காக அங்கிருந்த கல் மீது வேகமாக எறிந்திருக்கிறார்கள். அப்போது அந்தக் கல்லிலிருந்து இரத்தம் வெளி வந்திருக்கிறது. ''அது சாதாரணக் கல் அல்ல. வன துர்க்கை அந்தக் கல்லை தனது வீடாகக் கொண்டிருக்கிறார்'' என்று பெரியவர்கள் சொன்னார்கள். அதன் பின்னர் அனைவரும் வனதுர்க்கை குடியிருக்கும் கல்லை வணங்க ஆரம்பித்திருக்கிறார்கள். வனதுர்க்கை பெண் தெய்வம் என்பதால், சிறார்கள் பலரும் தங்களை சிறுமிகளாக வேடமிட்டு அலங்கரித்துக்கொண்டு, மலர் மாலைகளைப் பின்னி வன துர்க்கைக்கு அணிவித்து வழிபட்டு வந்திருக்கிறார்கள். அந்த வழக்கம் காலக்கிரமத்தில், ஆண்கள் தங்களை பெண்களாக வேடம் போட்டுத் திருவிழாவில் கலந்துகொள்ளும் வகையில் பரிணமித்திருக்கிறது. மரத்தின் அடியில் இருந்த வன துர்க்கையும், ஸ்ரீ கொட்டன் குளங்கராதேவி கோயிலாக மாறியது.

மார்ச் 25 அன்று இந்தக் கோயிலில், 'நேர்க் கோட்டில் ஐந்து திரிகள் எரியும்' வித்தியாசமான சமய விளக்கைக் கையில் ஏந்தி, அழகான பெண்கள் உருவத்தில் ஆண்கள் ஊர்வலம் நடத்துகிறார்கள். பெரும்பாலும் இப்படி சமய விளக்கு ஏந்தி கோயிலை வலம் வருவது ஏனோதானோ முறையில் இல்லை. கண்ணுக்கு மை இட்டு, நெற்றியில் பொட்டு வைத்து, செயற்கைக் கூந்தல் பொருத்தி மல்லிகையால் கூந்தலை நிறைத்து, நெற்றிச் சூடி அணிந்து, நேர்த்தியாகப் புடவை கட்டி, உடலெங்கும் மின்னும் நகைகள் அணிந்து, பாதங்களில் கொலுசு பளபளக்க அன்னம்போல அடிமேல் அடிவைத்து அட்டகாசமான அழகிகளாக நடந்து வருவார்கள் இந்த 'வசீகர' ஆண்கள். அழகிலும் நளினத்திலும் நிஜப் பெண்களே பொறாமைகொள்ளும் அளவுக்கு பிரமாதமாகப் பிரகாசிப்பார்கள் இந்த வேடம் தரித்த ஆண்கள்.

அப்படிப் பெண்களாக மேக்கப் போட்டு அசத்தும் ஆண்களில், மகா நேர்த்தியாக இருக்கும் ஆணுக்கு முதல் பரிசு வழங்கி கௌரவிக்கிறார்கள் என்று சமூக வலைத்தளங்களில் எழுதினர். அப்படிப் பேரழகியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதாகச் சொல்லப்படும் ஷாலியின் படம்தான் வைரலாகிவருகிறது. கூடவே 'இவர் பெண்தான்' என்று சிலரும், 'இல்லை... திருநங்கைதான். ஓர் ஆண் இப்படிப் பெண் வேடம் போட்டால் இவ்வளவு அழகாக இருப்பாரா?' போன்ற கருத்துகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

பெண் வேடமிட்ட இதர ஆண்களும் ''சபாஷ்... சரியான போட்டி'' என்று சொல்லுமளவுக்கு நடிகைகளுக்குப் போட்டியாக மாறியிருந்தார்கள். இந்தத் திருவிழாவில் அழகுக்கலையை மேற்கொள்ளும் கலைஞர்களுக்கு செம வசூல்!

ஸ்ரீகொட்டன் குளங்கராதேவியிடம் வேண்டிக் கொண்ட வேண்டுதல்கள் பலித்துவிட்டால், அடுத்த திருவிழாவில் ஆண்கள் இப்படிப் பெண் வேடமிட்டு சமய விளக்கு ஏந்தி, கோயிலை வலம் வந்து பூஜை நடத்தி, தேவிக்குத் தங்கள் நன்றிகளைக் காணிக்கையாக்குகிறார்கள். இது இங்கு பல ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்படும் வழக்கம்.

ஷாலிக்கு ஈடுகொடுக்கும் கௌதம் ஒரு மருத்துவ மாணவர். மோகினி ஆட்ட மங்கை வேடத்தில் கலக்கிக்கொண்டிருந்தார். ''எதற்காக இந்த மோகினி வேஷம்?'' என்று அவரிடம் கேட்டேன். ''நான் உக்ரைனில் மருத்துவம் படித்துக்கொண்டிருந்தேன். ரஷ்யா, உக்ரைன் மீது போர் தொடுத்ததால், படிப்பை நிறுத்திவிட்டு நான் மற்ற மாணவர்களுடன் கேரளம் வந்து சேர்ந்தேன். அதன் பின்னர் மருத்துவப் படிப்பை உக்ரைனில் தொடர முடியவில்லை. தடைப்பட்ட மருத்துவப் படிப்பை ஜோர்ஜியாவில் தொடர வேண்டும் என்று தேவியிடம் பிரார்த்தித்தேன். அது இப்போது சாத்தியமாகியிருக்கிறது. அதற்காக எனது நேர்த்திக்கடனைச் செலுத்தவே இப்படி மோகினி ஆட்ட மங்கையாக வேடமிட்டு, சிறப்பு பூஜை நடத்தி முடித்தேன்'' என்றார்.

''ஷாலியைவிட கௌதம் அழகாக இருக்கிறார். அவருக்கே முதல் பரிசு கிடைத்திருக்க வேண்டும்'' என்று பலரும் சொன்னார்கள். அது உண்மை என்றாலும், ஒரு நெருடல். நடப்பது கோயில் திருவிழா. கோயிலில் அழகிப் போட்டி சரியா? சமூக வலைத்தளங்களில் அதகளம் ஆகும் ஷாலி குறித்த செய்தி எந்த அளவு உண்மை? இது குறித்து கோயிலின் முன்னாள் செயலாளர் ஜிதன் தெரிவிக்கையில்,

''ஆமாங்க... எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு எங்கள் கோயில் திருவிழாவுக்கு அதிக முக்கியத்துவம் கிடைத்தது. அதற்குக் காரணம் 'ஷாலி அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்' என்ற செய்திதான். அப்படியொரு அழகிப் போட்டி அல்லது அழகித்தேர்வு இந்தத் தடவை மட்டுமல்ல, எப்போதுமே நடந்ததில்லை. இனியும் நடக்கப் போவதில்லை. நாங்கள் நடத்துவது திருவிழா. அழகிப்போட்டி அல்ல. சமூக வலைத்தளங்களில் யாரோ செய்தியைத் திரித்து வெளியிட, அது வைரல் ஆகிவிட்டது. பல நூறு ஆண்டுகளாக ஆண்கள் இங்கு பெண்கள் வேடத்தில் வழிபடுவது நடந்து கொண்டிருக்கிறது. கோயிலுக்கு வரும் பக்தர்களில் சிறந்த அழகியைத் தேர்ந்தெடுப்பதும், பரிசு வழங்குவதும் கோயிலின் வேலை அல்ல. இதை சமூக வலைத்தளங்களில் இயங்குபவர்கள் புரிந்து கொள்ளவில்லை'' என்றார்.

அழகிகள் என்றால் 'செல்ஃபி' எடுக்க ஆர்வமுள்ள ஆட்கள் இருப்பார்களே..! இங்கேயும் பெண்களாக உருமாறிய ஆண்களுடன் பலரும் 'செல்ஃபி' எடுக்கப் போட்டி போட்டார்கள். இந்தத் திருவிழாவில் திருநங்கைகளும் சிறிய எண்ணிக்கையில் கலந்துகொள்கிறார்கள் என்பது கூடுதல் செய்தி.

நன்றி - விகடன்


### நக்கல் நமசிவாயம்

கடன் வாங்குறதும் , முட்டை வாங்குறதும் சின்ன வயசில கணக்குப்பாடத்திலேயே சொல்லிக்கொடுத்த விஷயங்கள் தானே..!



### தவக்கால சிந்தனை

**இன்று பெரிய வெள்ளி.. கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்..**



வானங்களைக் கடந்து சென்ற இறைமகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமை குருவாகக் கொண்டுள்ளதால் நாம் அறிக்கையிடுவதை விடாது பற்றிக்கொள்வோமாக! ஏனெனில், நம் தலைமைக் குரு நம்முடைய வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்ல. மாறாக, எல்லா வகையிலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டவர். எனினும், பாவம் செய்யாதவர். எனவே, நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும் அருள்நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக. அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி, மன்றாடி வேண்டினார். அவர் கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு, கடவுள் அவருக்கு செவிசாய்த்தார். அவர் இறைமகனாக இருந்தும், துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். அவர் நிறைவுள்ளவராகி, தமக்குக் கீழ்ப்படிவோர் அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானார். கிறிஸ்து சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே, கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

## இன்றைய நாளில்...

- 1827 – ஆங்கிலேய மருந்தியலாளர் ஜோன் வோக்கர் தான் முந்தைய ஆண்டு கண்டுபிடித்த தீக்குச்சியை விற்பனைக்கு விட்டார்.
- 1927 – முதலாவது தொலைதூர தொலைக்காட்சி சேவை வொஷிங்டன் நகரம் - நியூயோர்க் நகரம் ஆகியவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்டது.
- 1928 – வோல்ட் டிஸ்னி தனது புகழ்பெற்ற கார்ட்டூன் பாத்திரமான மிக்கி எலியின் படத்தை வரைந்தார்.
- 1948 – உலக சுகாதார ஸ்தாபனம் ஐக்கிய நாடுகள் சபையால் தொடங்கப்பட்டது.
- 1955 – வின்ஸ்டன் சர்ச்சில் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் பதவியிலிருந்து விலகினார்.
- 1978 – யாழ்ப்பாணத்தில் இலங்கையின் பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை உட்பட பல பொலிஸார் போராளிகளால் கொல்லப்பட்டனர்.
- 1978 – நியூட்ரன் குண்டு தயாரிக்கும் திட்டத்தை அன்றைய அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் கைவிட்டார்.
- 1983 – ஸ்டோரி மஸ்கிரேவ், டொன் பீட்டர்சன் ஆகிய இருவரும் விண்கலத்தில் இருந்து விண்ணில் நடந்த முதல் வீரர்களானார்கள்.

# புத்தாண்டை முன்னிட்டு மேலதிகமாக பஸ்கள் சேவையில்



தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு விடுமுறைக் காலத்தில் கொழும்பில் இருந்து வெளியூர்களுக்கு செல்லும் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த தனியார் பஸ் உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஏப்ரல் 10ஆம் திகதிமுதல் விசேட பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தேவையின் அடிப்படையில் பல்வேறு இடங்களுக்கு மேலதிக பஸ்கள் இயக்கப்படும் என்றும் அரை சொகுசு பஸ் கட்டணத்தில் விசேட பஸ்கள் சேவையில் சேர்க்கப்படும் என்றும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

# சிறுகடற்றொழிலாளர்களை பாதுகாக்க ஒத்துழையுங்கள்!

## சர்வதேச அமைப்புகளுக்கு அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

சிறுகடற்றொழிலாளர்களைப் பாதுகாத்து அவர்களின் வாழ்க்கை தரத்தினை முன்னேற்றுவதற்கு தன்னால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சர்வதேச அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் சிறுகடற்றொழிலாளர்களைப் பாதுகாப்பது தொடர்பான ஆய்வறிக்கையின் அறிமுக நிகழ்வில் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சரினால் மேற்குறித்த அழைப்பு விடுக்கப்பட்டது.

தேசிய மீனவர் ஒற்றுமை அமைப்பு, உலகளாவிய மூலோபாய வரைபிற்கான ஆலோசனைக் குழு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளின் முயற்சியால் தயாரிக்கப்பட்டுள்ள ஆய்வறிக்கையின் அறிமுக நிகழ்வு நேற்று (06) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காணொளி ஊடாக கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் உரையாற்றுகையில்,



இலங்கையில் சுமார் 2 இலட்சம் சிறுகடற்றொழிலாளர்கள் இருக்கின்ற நிலையில், அவர்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாப்பதற்கும் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கும் கடற்றொழில் அமைச்சு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

மேலும், இந்தியக் கடற்றொழிலாளர்கள் அத்துமீறி இலங்கை கடற் பரப்பினுள் நுழைந்து சட்ட விரோத தொழிலான இழுவைமடி வலை தொழிலை மேற்கொள்வதால் இலங்கையின் சிறுதொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப்படுவதாக வருத்தம் வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்தை சுமூகமாக தீர்ப்பதற்கு இராஜதந்திர ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் கலந்துரையாடல்கள் மூலமாகவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாகவும், தன்னுடைய முயற்சிகளுக்கு சர்வதேச அமைப்புகளின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு கைதான 12 இந்திய மீனவர்களில் 11 பேர் விடுதலை

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான 12 இந்திய மீனவர்களில் 11 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், ஒருவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் நேற்று (06) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த மாதம் 23ஆம் திகதி எல்லை தாண்டி அனலைதீவு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 12 பேர் இரு படகுகளுடன் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஆறாவது சந்தேகநபர் ஒரு வருடத்திற்கு முன் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகி நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டிருந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவருக்கு 14 மாத கால சிறைத்தண்டனையை விதித்து ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், கைப்பற்றப்பட்ட இரு படகுகளில் ஒரு படகை பறிமுதல் செய்தும் மற்றைய படகின் உரிமையாளர் இன்மையினால் அந்த படகிற்கான உரிமை கோரும் வழக்கினை அடுத்த மாதம் 06 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தும் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவ படகுரிமை மீதான வழக்கும் அடுத்த மாதம் 08ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# மின்சாரம் தாக்கி மாணவன் பலி

## கொக்குவில் குளப்பிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தர மாணவன் நேற்று முன்தினம் (05) மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

கொக்குவில் குளப்பிட்டியைச் சேர்ந்த மோகனதாஸ் கிஷோத்மன் (வயது 17) எனும் மாணவனே உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டில் மின் அழுத்தியினை மின் இணைப்புடன் பொருத்த முற்பட்டவேளை மின்சாரம் தாக்கியதாகவும், அதனை அடுத்து மாணவனை வைத்தியசாலையில் சேர்த்தபோதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதான மூவர் விளக்கமறியலில்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருட்களை வைத்திருந்த மூன்று சந்தேக நபர்களை இம்மாதம் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் நேற்று முன்தினம் (05) உத்தரவிட்டார்.

கிண்ணியா, குட்டிக்கரைச்சி, குறிஞ்சாக்கேணி, பகுதியைச் சேர்ந்த 42, 24 மற்றும் 31 வயதுகளையுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரிடமிருந்தும் 10 கிராம் ஐஸ் போதைப்பொருளை திருகோணமலை போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய கிண்ணியா பகுதியில் வைத்து ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்துள்ளதாகவும், சந்தேகநபர்களை கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை கிண்ணியா பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# டயனா கமகேவின் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

டயனா கமகேவின் வழக்கு விசாரணை ஏப்ரல் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் பாராளுமன்ற உறுப்புரிமைக்கு எதிராக அவரை கைதுசெய்ய உத்தரவு பிறப்பிப்பதா, இல்லையா என்பது தொடர்பிலான தீர்மானம் ஏப்ரல் 24ஆம் திகதி அறிவிக்கப்படும் என கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் நேற்று (06) உத்தரவிட்டார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 32ஆவது பிரிவின் கீழ் டயனா கமகேவை கைது செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு மனுதாரர் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.



பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட இ.தொ.காவின் உபதலைவர் பாரத் அருள்சாமியை, ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் நேற்று (06) நேரில் சந்தித்து வாழ்த்துக் கூறினார்.

# மட்டக்களப்பில் திருட்டு மற்றும் தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடைய மூவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள வெவ்வேறு பிரதேசங்களில் கோவிலில் இரும்புக்கம்பி திருடிய ஒருவர், துவிச்சக்கரவண்டி திருடிய ஒருவர் மற்றும் மாமனாரை கோடரியால் தாக்கிய ஒருவர் என 3 பேரை நேற்று முன்தினம் (5) இரவு கைதுசெய்துள்ளாக பொலிஸார் தெரிவித்தனர்.



ஊறணியிலுள்ள கொத்துக்குளத்து மாரியம்மன் ஆலயத்தினுள் நேற்று முன்தினம் (05) இரவு 10 மணியளவில் உள்நுழைந்த திருடன், கோபுர கட்டட புனரமைப்பிற்காக வைக்கப்பட்டிருந்த இரும்புக்கம்பிகளை திருடிக்கொண்டு இருந்தபோது கோவில் காவலாளி பொலிஸாருக்கு தெரிவித்ததையடுத்து, திருடன் கம்பிகளை திருடிக்கொண்டு வெளியே வரும்போது நாவற்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனை பொலிஸார் மடக்கிப் பிடித்து கைதுசெய்ததுடன், 10 இரும்புக் கம்பிகளையும் கைப்பற்றினர்.

மேலும் சீலாமுனை பகுதியில் துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கூளாவடி பிரதேசத்தைச் சோந்த 60 வயதுடைய ஒருவரை கைதுசெய்ததுடன், அவரிடமிருந்து திருடப்பட்ட 2 துவிச்சக்கரவண்டிகளை மீட்டனர்.

இதேவேளை புதூர் பிரதேசத்தில் கடந்த மாதம் 4ஆம் திகதி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் காரியாலயத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற 65 வயதுடைய மாமனாரை கோடரியால் தாக்குதல் நடத்திவிட்டு தலைமறைவாகி வந்த 44 வயதுடைய மருமகனை கைதுசெய்தனர்.

இந்த வெவ்வேறு சம்பவங்களில் கைதுசெய்யப்பட்ட 3 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# காணி வழக்கு தொடர்பில் முறைப்பாடளிக்க வந்தவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழப்பு

களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் சிறு முறைப்பாடுகள் பிரிவில் காணி வழக்கு தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது முறைப்பாட்டாளர் திடீரென கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை தெற்கு செனவிரத்ன பிளேஸில் வசிக்கும் கஜநாயக்க முதலிகே நாலக துஷார என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணி வழக்கு தொடர்பில் உயிரிழந்தவர் களுத்துறை தெற்கு பொலிஸில் முறைப்பாடு செய்ய வந்த நிலையில், திடீரென மயங்கி விழுந்துள்ளதாகவும் அதனையடுத்து பொலிஸார் அம்பியூலன்ஸ் மூலம் களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

களுத்துறை தெற்கு தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குடிநீரைப் பெறுவதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை

## காரைநகர் பிரதேச செயலக உதவிச் செயலரிடம் மகஜர் கையளிப்பு








குடிநீரைப் பெறுவதற்கு அனுமதி வழங்குமாறு கோரி நேற்று (06) எவரடி குடிநீர் விநியோக நிறுவனத்தினர் மற்றும் காரைநகர் பிரதேச மக்கள் இணைந்து, காரைநகர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றினை கையளித்தனர்.

இது குறித்து எவரடி நிறுவனத்தின் உரிமையாளர் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் 2015ஆம் ஆண்டிலிருந்து 1200 குடும்பங்களுக்கு, அதாவது நாளொன்றுக்கு 150 குடும்பங்களுக்கு தண்ணீர் வழங்கி வருகின்றோம். இந்தப் பிரதேச சபையானது கடந்த 7 அல்லது 8 வருடங்களாக தண்ணீர் வழங்கவில்லை. அவர்களுக்கென்று ஒரு நிகழ்ச்சி நிரலின் கீழ் அவர்கள் இயங்குகின்றனர்.

2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் சில அரசியல்வாதிகளால் ஏற்பட்ட இடையூறு காரணமாக 2019 ஏப்ரல் மாதத்தில், மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட எனது சொந்த காணியில் உள்ள விளான் கிணற்றில் தண்ணீர் எடுக்கவிடாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. இது அரசியல் காரணத்திற்காகவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

குடிநீரை வழங்குவதற்கான அத்தனை சுகாதார வசதியும் நாங்கள் செய்துள்ளோம். இது குறித்து ஆளுநருக்கும் கடிதம் வழங்கியுள்ளோம்.

இந்நிலையில், நேற்று (06) காரைநகர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றினை கையளித்துள்ளோம். அவர் அரசாங்க அதிபரிடம் இது குறித்து பேசுவதாகவும், எம்மை பிரதேச சபையுடன் பேசி இணக்கத்திற்கு வருமாறும் கூறினார்.

எமக்கு தீர்வினை வழங்குமாறு கோரி கடந்த மூன்று நாட்களாக எமது குடிநீர் பவுசர்களை பிரதேச செயலகத்திற்கு முன்னால் தொடர்ந்து நிறுத்தியிருந்தோம். ஆனால், அதற்கு பிரதேச செயலகம் எந்தவிதமான பின்னூட்டலையும் காட்டவில்லை. காரைநகர் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். காரைநகர் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் ஒரு தகுதி அற்றவர். நாங்கள் ஒரு திறமையான பிரதேச செயலரை எதிர்பார்த்து நிற்கின்றோம் - என்றார்.

இது குறித்து அப்பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்றோம். இந்நிலையில், இன்று மகஜர் கொடுப்பதற்கு பிரதேச செயலகத்திற்கு வந்தோம். உதவிப் பிரதேச செயலர் நீண்டநேரம் காரணம் எதுவும் இல்லாமல் எங்களை காக்க வைத்துள்ளார். எமக்கு அடிப்படை வசதியான குடிநீர் வசதியை பெறுவதற்கு உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றனர்.

மகஜர் கையளிக்கும்போதும் கலந்துரையாடலின்போதும் ஊடகவியலாளர்கள் புகைப்படம் மற்றும் காணொளி எடுப்பதற்கு காரைநகர் உதவிப் பிரதேச செயலர் கடுமையான தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன்கிழமை 2023.04.05

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 5081 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 10,548,608.00
ஆங்கில எழுத்து: G — வெற்றி இலக்கங்கள்: 3 7 4 6 0 3

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம்: 3323 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 94,127,681.04
ஆங்கில எழுத்து: B — வெற்றி இலக்கங்கள்: 22 30 46 75

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 1536 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 11,784,752.00
வெற்றி இலக்கினம்: மகரம் — வெற்றி இலக்கங்கள்: 3 3 0 5 5 2

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம்: 1111 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 84,904,749.60
ஆங்கில எழுத்து: Z — வெற்றி இலக்கங்கள்: 40 46 51 79

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 390 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,822,502.20
வெற்றி இலக்கினம்: மிதுனம் — வெற்றி இலக்கங்கள்: 07 24 42 45 — விசேட இலக்கினம்: மிதுனம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம்: 1429 — அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 312,817,338.00
ஆங்கில எழுத்து: G — சுப்பர் இலக்கம்: 25 — வெற்றி இலக்கங்கள்: 18 24 47 49
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

# வேறாகத் துண்டிக்கப்பட்ட கையை பொருத்தி வைத்தியர்கள் சாதனை



(கண்டி செய்தியாளர்)

உடலில் இருந்து வேறாகத் துண்டிக்கப்பட்ட கையை நான்கு மணித்தியால சத்திர சிகிச்சையின் பின்னர் வெற்றிகரமாகப் பொருத்திய சம்பவம் ஒன்று கேகாலை வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

கேகாலை பகுதியில் 24 வயதுடைய யுவதி ஒருவரின் முழங்கைக்கு சற்று மேலாக ஒரு கை கத்தியால் வெட்டப்பட்டு முற்றாகத் துண்டிக்கப்பட்டது.

இந்நிலையில், உறவினர்கள் யுவதியின் கையை தனியாக குளிரூட்டப்பட்ட பெட்டியில் பாதுகாப்பாக எடுத்து வந்து பாதிக்கப்பட்ட யுவதியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

கேகாலை வைத்தியசாலையின் அறுவை சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஆனந்த ஜயவர்தன தலைமையிலான குழுவினர் உடனடியாக கையைப் பொருத்தும் பணியில் ஈடுபட்டனர்.

சுமார் 04 மணித்தியாலங்கள் நீடித்த மேற்படி சத்திர சிகிச்சையையடுத்து கை பொருத்தப்பட்டு நோயாளி காப்பாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, அந்த யுவதியின் உடல் நிலையில் படிப்படியாக முன்னேற்றம் காணப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு



(மஸ்கெலியா செய்தியாளர்)

மின்சார சபைக்கு உரித்தான மவுசாகலை நீர்த்தேக்கத்தில் தற்போது பாரியளவில் நீர் குறைந்துள்ள நிலையில் அங்கு மாணிக்கக்கல் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் நபர்களை மையமாக கொண்டு இந்த சட்டவிரோதமான மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெற்றுவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இராகலை – குட்வுட் வரையான பஸ் சேவை இடைநிறுத்தம்

## மீள ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள்

(மஸ்கெலியா செய்தியாளர்)

நுவரெலியா போக்குவரத்து சபையின் கீழ் இயங்கி வந்த இராகலையில் இருந்து ஹைபொரஸ்ட் வழியாக கோணபிட்டிய குட்வுட் வரையிலான பஸ்சேவை அண்மைக்காலமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த பஸ் சேவையைப் பயன்படுத்தி வலப்பனை மற்றும் ஹங்குரங்கெத்த வலயத்திற்குட்பட்ட சுமார் 13க்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு செல்லும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் மாணவர்களும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்தப் பஸ்சேவை காலை 07 மணிக்கு இராகலையிலிருந்து புறப்பட்டு ஹைபொரஸ்ட் வழியாக கோணபிட்டிய குட்வுட் வரை சேவையில் ஈடுபட்டு வந்தது. எனினும், இந்த பஸ்சேவை நிறுத்தப்பட்டமையால் பாடசாலைகளுக்கு உரிய நேரத்திற்கு ஆசிரியர்கள் வருகை தர முடியாததன் காரணமாக மாணவர்களின் கற்பித்தல் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

அத்தோடு, ஆசிரியர்களும் போக்குவரத்துக்கு மாற்று வழிகளை பயன்படுத்துவதால் நாள் ஒன்றுக்கு 1000 ரூபா தொடக்கம் ஆயிரத்து 500 ரூபா வரை செலவு செய்வதோடு சிலர் பல கிலோமீற்றர் தூரம் நடந்தும் செல்கின்றனர். இந்தப் போக்குவரத்து சேவை அடிக்கடி இடைநிறுத்தப்படுவதால் அதனை முறையாக வழங்குமாறு ஆசிரியர்களால் பல போராட்டங்கள் நடத்தப்பட்டன,

பல்வேறு கோரிக்கைகளும் பல்வேறு தரப்பினரிடம் விடுக்கப்பட்டும் பிரயோசனமில்லை. போராட்டம் அல்லது போக்குவரத்து சபையிடம் கோரிக்கை வைக்கும்போது அடுத்து ஒரு வாரத்திற்கு மாத்திரம் பஸ்சேவை இடம்பெறும். மீண்டும் பஸ் சேவை நிறுத்தப்படும் என பொதுமக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் கடந்த 04 மாதங்களாக இந்தப் பஸ் சேவை முற்றுமுழுதாக நிறுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்து சபையின் அதிகாரிகளும் பஸ் பழுதாகியுள்ளது, ஓட்டுநர் இல்லை என பல சாக்குபோக்குகளை கூறுகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உடனடியாக கவனம் செலுத்தி மீண்டும் முறையான பஸ் சேவையை ஆரம்பிக்க முன்வர வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




**பாடசாலைகள் ரீதியாக நடத்தப்பட்ட மாணவர் பாராளுமன்றத்துக்கு உக்குவளை குரீவெல ஹமீதியா கல்லூரியிலிருந்து சபாநாயகராக தெரிவான எப்.சுமையா, பிரதமராக தெரிவுசெய்யப்பட்ட எப்.ஜெனிபர் இக்கல்லூரி அதிபர் எம்.அஸ்லம் ஆசிரியை எஸ்.சாபினாஸ் ஆகியோருடன் காணப்படுகின்றனர். (உக்குவளை செய்தியாளர்)**

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# சிறுவர் பூங்கா பகுதியில் மூன்று குளவிக் கூடுகள்

## அகற்றுமாறு மஸ்கெலியா பிரதேச சபையிடம் கோரிக்கை



(மஸ்கெலியா செய்தியாளர்)

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உரித்தான சிறுவர் பூங்கா பகுதியில் உள்ள மூன்று மரங்களில் குளவிக் கூடுகள் உள்ளன. அவற்றினால் அங்கு விளையாடும் சிறார்களுக்கு ஆபத்து ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து மஸ்கெலியா பிரதேச சபை முன்வந்து அந்தக் குளவிக் கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மூன்று மரங்களில் உள்ள குளவிக்கூடுகள் மிகவும் விஷம் உள்ள குளவிகள் என அப் பகுதியில் உள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இதில் வாழும் குளவிகள் மரக் கிளைகள் முறிந்து விழும் பட்சத்தில் அங்குள்ள சிறார்களுக்கு ஆபத்து ஏற்படும் என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆகையால் பிரதேச சபை உடனடியாக கவனம் செலுத்தி அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



**மாத்தளை இறத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை(05) இடம்பெற்றது. இதன்போது விநாயகப்பெருமான் தேரில் ஆரோகணித்து வெளிவீதி விழா வருவதையும் பூஜை நிகழ்வு இடம்பெறுவதையும் காணலாம். கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த மகோற்சவத்தில் தேர்த்திருவிழாவை தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை(06) தீர்த்தோற்சவம் இடம்பெற்றதுடன் இன்று வெள்ளிக்கிழமை (07) பூங்காவனத் திருவிழா இடம்பெறும்.**

# நாவற்குழியில் இடம்பெற்ற பனை உற்பத்திசார் வாழ்வாதார உதவித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு



(யாழ். நிருபர்)

இந்தியாவின், ஓசூர் சிப்ஹொட் றோட்டறிக் கழகத்தின் "இலங்கைத் தமிழ் உறவுகளுக்கான வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின்" ஓர் அங்கமாக யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள பனை உற்பத்திசார் வாழ்வாதார உதவித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

றோட்டறி மாவட்டம் 2982இன் முன்னாள் உதவி ஆளுநர் றொட்டேரியன் சரவணன் தலைமையில் நாவற்குழியில் அமைந்துள்ள நெய்தல் கடற்கரை நகரின் கருத்தரங்கு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நாவற்குழிப் பகுதியிலுள்ள உழைப்புக் குடும்பங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சுமார் 30 பேருக்கு இத்திட்டத்தின் கீழ் பனைசார் உற்பத்திகள் மற்றும் கைவினைப் பொருட்களின் உற்பத்தி தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. பயிற்சிக்காலத்தில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கைப்படியாக மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதுடன், உற்பத்திப் பொருட்களுக்கான மூலதன உதவியும் வழங்கப்படவுள்ளது. அதுமட்டுமல்லாமல் பயிற்சியின் பின்னர் பயனாளிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் முழுமையாக கொள்வனவு செய்து சந்தைப்படுத்தும் வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நிதி அனுசரணை ஓசூர் சிப்ஹொட் றோட்டறிக் கழகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டத்தின் முதல் அணி பயிற்சியை முடித்துக்கொண்ட பின்னர் தொடர்ந்தும் பயனாளிகளை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த அறிமுக நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் தலைமைத் தூதரக அதிகாரியும், பிரதித் துணைத் தூதுவருமான ராம் மகேஷும் விருந்தினர்களாக கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் முகாமையாளர் பி.விஜியேந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், இந்தியாவின் றோட்டறி மாவட்டம் 2982இன் உதவி ஆளுநர் றொட்டேறியன் பி. தக்ஷாயினி, ஓசூர் சிப்ஹொட் றோட்டறிக் கழகத்தின் தலைவர் றொட்டேறியன் ரி.வி.முருகன் மற்றும் செயற்றிட்ட அனுசரணையாளர்களான ஓசூர் சிப்ஹொட் றோட்டறிக் கழக உறுப்பினர்கள், அவர்களது குடும்பத்தினரும், யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# யாழில் கிணற்றினுள் விழுந்து ஒருவர் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

தண்ணீர் அள்ளும்போது கிணற்றினுள் தவறி வீழ்ந்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த முத்துக்குமார் அப்புத்துரை (வயது 73) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டுக் கிணற்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை தண்ணீர் அள்ளும் போது, கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார் என வட்டுக்கோட்டை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மிகவும் ஆபத்தான நிலையில் திருவையாறு வில்சன் வீதி பாலம்



(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி திருவையாறு வில்சன் வீதியில் மூன்றாம் பகுதியிலுள்ள சரவணாஸ்பாலம் அதன் அத்திபாரம் இடிந்து வீழ்ந்த நிலையில் ஆபத்தானதாக காணப்படுகிறது.

இரணைமடு குளத்தின் இடதுகரை பிரதான நீர்ப்பாசன வாய்க்காலில் திருவையாறு வில்சன் வீதியையும் மூன்றாம் பகுதியையும் இணைக்கும் பாலம் இடிந்து விழும்நிலையில் தற்போது காணப்படுகிறது. விவசாய கிராமமான திருவையாறு பிரதேசத்திலிருந்து ஏனைய பகுதிகளுக்கு உழவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் தினமும் தங்களுடைய நாளாந்த நடவடிக்கைகளுக்காக தற்போதும் குறித்த பாலத்தினையே பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், குறித்த பாலம் எவ்வேளையிலும் இடிந்து விழும் ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.

குறித்த பாலம் இரணைமடு குள புனரமைப்பின் ஒரு பகுதியான இபாட் திட்டத்தின்கீழ் கடந்த சில வருடங்களுக்கு முன் புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்டது என்றும் ஆனால், புனரமைப்பின்போது மேலோட்டமாக பூசி மெழுகி புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்துவிட்டனர் என்றும் பிரதேச பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, குறித்த பாலத்தின் ஆபத்தை புரிந்துகொண்டு உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் அவசர கோரிக்கையை விடுத்துள்ளனர்.

# சாவகச்சேரியில் உரப்பை ஒன்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)



சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பருத்தித்துறை வீதிகெருடாவில் பகுதியில் அமைந்துள்ள காணியொன்றிலிருந்து நேற்று முன்தினம் (05) பிற்பகல் உரப்பை ஒன்றினுள் போடப்பட்ட நிலையில் வெடிபொருட்கள் சில இனங்காணப்பட்டுள்ளன.

வெடிக்காத நிலையில் 06 எறிகணைகள் உரப்பை ஒன்றினால் மறைக்கப்பட்டு பற்றைக்காடு ஒன்றிற்குள் போடப்பட்டிருந்த நிலையில், இது தொடர்பாக பொதுமக்கள் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

அதன்பின்னர் பொலிஸார் ஊடாக வெடிபொருட்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இராணுவத்தினர் முன்னெடுத்துள்ளனர்.

அருகிலுள்ள கிணறொன்றிலிருந்து மீட்கப்பட்ட வெடிபொருட்களே இவ்வாறு பற்றைக் காட்டிற்குள் வீசப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மாற்றுத்திறனாளி குடும்பத்திற்கு வீடு கையளிப்பு



(யாழ். நிருபர்)

விபத்து சம்பவம் ஒன்றால் மாற்றுத்திறனாளியான குடும்பத் தலைவரைக்கொண்ட குடும்பம் ஒன்றிற்கு புலம்பெயர் தம்பதியினர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதி அனுசரணையில் இராணுவத்தினரின் பங்களிப்புடன் வீடொன்று கட்டி கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் துன்னாலை தெற்கு ஜே/ 370 கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் ஐந்து பேர் அடங்கிய குடும்பமொன்றின் குடும்பத் தலைவர் விபத்தொன்றில் சிக்கி மாற்றுத்திறனாளியானார்.

அக்குடும்பத்தினருக்கு கனடாவில் வசிக்கும் தம்பதியினர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனம் ஆகியவற்றின் நிதி பங்களிப்பில் நான்காவது சிங்க ரெஜிமென்ற் படைப்பிரிவின் ஆளணி மற்றும் கட்டுமான உதவியுடன் வீடொன்று நிர்மாணிக்கப்பட்டது.

குறித்த வீட்டை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நான்காவது சிங்க ரெஜிமென்ட் லெப்டினன்ட் கேர்ணல் தவுலுகல தலைமையில் நேற்று (06) வியாழக்கிழமை நடைபெற்றது.

அந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சொர்ண போதொட்ட கலந்துகொண்டு வீட்டை பயனாளியிடம் கையளித்தார்.

# ஓர் இனத்துக்கும் மதத்துக்கும் மட்டுமே பணிபுரிகின்ற தொல்லியல் திணைக்களம்

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் விசனம்



தொல்லியல் திணைக்களம் ஓர் இனத்துக்கும் மதத்துக்கும் மாத்திரம் மட்டுமே பணிபுரிகின்ற அவலநிலை எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. இனவாத மற்றும் மதவாதப் போக்குகளினாலேயே நாட்டின் பொருளாதாரம் கையேந்தும் நிலைக்குச் சென்றுள்ளதாக மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

புல்மோட்டை, அரிசிமலை, பொன்மலைக்குடா பிரதேசத்தில் கட்டவிழ்க்கப்பட்டுள்ள இனவாத விஸ்தரிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்து நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை (04) உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

“இதுவரைகாலமும் ஆட்சியமைத்தவர்களும் ஆட்சியமைக்கத் துடித்தவர்களும், பேரினவாத சிந்தனையோடு இனவாதத்தை முதலீடாகவும் மூலதனமாகவும் தேர்தல் பிரசாரத்துக்காக பயன்படுத்தினர். இதன் விளைவே நாடு இந்தளவுக்கு சீரழிந்துபோக காரணமாக அமைந்துள்ளது. பிச்சை எடுக்கின்ற நிலைக்கும் அடுத்தவரிடம் கையேந்தும் நிலைக்கும் நாம் தள்ளப்பட்டுள்ளோம்., இதற்கான பொறுப்பை இனவாதத் தலைவர்களும் அதற்குப் பக்கபலமாக நின்று தீனிபோட்ட சில மதகுருமார்களுமே ஏற்க வேண்டும்.

திருகோணமலை மாவட்டம் முன்னர் இரண்டு தொகுதிகளாக மட்டும் அதாவது திருகோணமலை, மூதூர் ஆகிய இரண்டு தேர்தல் தொகுதிகளையே கொண்டிருந்தது. பின்னர், சேருவில என்ற புதிய தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டு, சிங்களப் பெரும்பான்மையினர் அங்கு குடியேற்றப்பட்டனர். இந்தத் தேர்தல் தொகுதி 1690 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக்கொண்டது. திருமலை மாவட்டத்தில் திருமலை 585 சதுர கிலோமீற்றராகவும் மூதூர் 368 சதுர கிலோமீற்றராகவும் இருக்கின்றன.

திருமலை மாவட்டத்தின் புல்மோட்டையில் இருந்து 500 km தூரத்துக்கு அப்பால் இருக்கின்ற தேரர் ஒருவர், கடந்த சில நாட்களுக்கு முன்னர் தனது அடியாட்களுடனும் ஆயுததாரிகளுடனும் வந்து அரிசிமலை, பொன்மலைக்குடா பிரதேசத்தில், முஸ்லிம்கள் வாழ்கின்ற பகுதியில் புத்தர் சிலை வைக்க முயற்சித்ததில் களேபரம் ஏற்பட்டது. அப்பிரதேச மக்களை அங்கு வந்த ஆயுததாரிகள் அச்சுறுத்தியும் உள்ளனர். குறித்த மதகுருவுக்கு ஆயுதப் பாதுகாப்பு வழங்கியது யார்? அந்தப் பிரதேசத்தில் பௌத்தர்களும் இல்லை. அவ்வாறிருக்க, அப்பிரதேசத்துக்கு வலுக்கட்டாயமாக வந்து இவ்வாறான முயற்சி ஒன்றில் அவர் ஈடுபட்டிருக்கின்றார். இந்த நடவடிக்கை இனங்களுக்கிடையிலான விரிசலை ஏற்படுத்தும் நோக்கிலேயே மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

புல்மோட்டையில் வாழும் மக்களுக்கு 10 பேச்சர்ஸ் கூட காணி இல்லாத நிலையில், அடுத்த பரம்பரைக்கும் எங்குமே காணி இல்லாத ஒரு நிலையில் இருக்கின்றபோது, இவ்வாறான ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதன் நோக்கம்தான் என்ன?

ஏற்கனவே, அந்தப் பகுதியில் தொல்லியல் திணைக்களம் 1200 ஏக்கரை வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தி, அதன்பின்னர் வெளிமாவட்டங்களிலிருந்து ஆட்களை கொண்டுவந்து விவசாயம் செய்ய வழிவகுத்துள்ளனர். தொல்லியல் திணைக்களம் ஓர் இனத்துக்கும் மதத்துக்கும் மாத்திரம் மட்டுமே பணிபுரிகின்ற அவலநிலை எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. தற்போது, பொன்மலைக் குடாவிலும் சிலையை வைத்து, அந்த இடத்தை வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்துவதே இவர்களின் குறிக்கோளாக இருக்கின்றது.

இதேபோன்று வடக்கு, கிழக்கில் தொல்லியல் திணைக்களம், வனபரிபாலனத் திணைக்களம் ஆகியன தாம் நினைத்த மாத்திரத்தில் மக்களின் பூர்வீகக் காணிகளை சுவீகரித்து, மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கி வருவதையும் நாம் காணமுடிகிறது.

எனவே, மேற்படி விடயத்தில் ஜனாதிபதி பாராமுகமாக இருக்காமல் நேரடியாகத் தலையிட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். அத்துடன், குறித்த மதகுருவுக்கு வழங்கியிருந்த ஆயுதப் பாதுகாப்பு தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றேன்.

அத்துடன், தலைமன்னார், இராமேஸ்வரம் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதனூடாக சுற்றுலாப்பயணிகளை பெருமளவில் வரவழைக்க முடியும். அதனூடாக நமது நாட்டின் பொருளாதாரத்தை மேலும் கட்டியெழுப்ப முடியும். ஜனாதிபதியை நான் அண்மையில் சந்தித்து, இது தொடர்பில் வேண்டுகோள் விடுத்தபோது, அது சம்பந்தமாக முயற்சிகள் இடம்பெறுவதாக அவர் தெரிவித்தார். அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனை துரிதப்படுத்தவேண்டுமெனக் கோருவதுடன், பிரதேசத்துக்குப் பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், இந்த விடயத்திற்கு எமது முழு ஒத்துழைப்பையும் வழங்க காத்திருக்கின்றோம்” என்று தெரிவித்தார்.

# யாழ். நாவலர் மண்டப விவகாரம்; ரிட் மனு தாக்கல் செய்ய நடவடிக்கை




நாவலர் மண்டபத்திலிருந்து யாழ். மாநகர சபை வெளியேறுவதற்கு யாழ். நீதவான் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ள நிலையில், இந்து கலாசார திணைக்களம் ‘ரிட்’ மனுத் தாக்கல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ். மாநகர சபையை நாவலர் மண்டபத்திலிருந்து வெளியேறுமாறு வடமாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்த நிலையில், அதனை எதிர்த்து யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வரதராஜா பார்த்தீபனால் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது.

வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மன்று, யாழ். மாநகர சபையை நாவலர் மண்டபத்திலிருந்து வெளியேறும் ஆளுநரின் நடவடிக்கைக்கு இடைக்கால தடை உத்தரவை வழங்கியது.

நாவலர் மண்டபத்தின் உரிமம் தங்களுக்கு தான் உரியது என இந்து கலாசாரத் திணைக்களம் ஏற்கனவே வலியுறுத்திவந்த நிலையில், எதிர்வரும் வாரங்களில் குறித்த நீதிமன்றக் கட்டளைக்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் ரிட் மனு செய்யவுள்ளது.

# தேசிய மரபுரிமைச் சின்னமாகும் ஒன்பது வளைவுப் பாலம்



தெமோதரை ஒன்பது வளைவுப் பாலத்தை (Nine Arches Bridge) தேசிய மரபுரிமைச் சின்னமாக பெயரிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாலத்தைப் பாதுகாத்து, அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், பேராசிரியர் அனுர மனதுங்க தெரிவித்துள்ளார்.

# 9.2 கோடி ரூபா பெறுமதியான ஹஷிஸ் போதைப்பொருளுடன் மூவர் கைது





9.2 கோடி ரூபாவுக்கு அதிக பெறுமதியுடைய 92 கிலோ ‘ஹஷிஸ்’ போதைப்பொருளை ஏற்றிச்சென்ற வெளிநாட்டுப் பிரஜைகள் மூவர் தலைமன்னார் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் மணல்மேடு கடற்பகுதியில் நேற்று முன்தினம் (05) மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேகத்திற்கிடமான வெளிநாட்டுப் படகொன்றை நிறுத்தி சோதனையிட்டதில், 92 கிலோகிராம் எடையுள்ள, 03 சாக்கு மூடைகளில், 95 பொதிகளாக இட்டு மறைத்துவைக்கப்பட்டிருந்த ‘ஹஷிஸ்’ போதைப்பொருளுடன் மூன்று வெளிநாட்டுப் பிரஜைகளை கைதுசெய்ததுடன், படகையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த ‘ஹஷிஸ்’ போதைப்பொருள் 9.2 கோடி ரூபா பெறுமதியானது என கடற்படையினர் தெரிவித்தனர்.

கைதான சந்தேகநபர்கள் போதைப்பொருளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# இலவச TSP உரத்தை ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு விவசாயிகளிடம் வேண்டுகோள்

**விவசாய அமைச்சு**

அரசாங்கத்திடமிருந்து இதுவரை இலவச TSP உரம் கிடைக்காத அனைத்து விவசாயிகள் ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பிரதேச விவசாய சேவை நியைங்களில் பெற்றுக்கொள்ளுமாறு விவசாய அமைச்சு கேட்டுக்கொள்கிறது.

விவசாய சேவை நிலையங்களில் கையிருப்புள்ள TSP உரம் ஏப்ரல் 10ஆம் திகதிக்குப் பிறகு மீண்டும் பிரதான களஞ்சியங்களுக்கு வரவழைக்கப்படும் என்று விவசாய அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கைக்கான இலவச உரம் வழங்கும் நடவடிக்கை தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உரக் கம்பனிகள் மற்றும் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்திடம் TSP உரம் மற்றும் ஏனைய உரங்களின் விநியோகத்தின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்தார்.

அதன்படி லங்கா உர நிறுவனம் மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் இணைந்து 36 ஆயிரம் மெற்றிக் தொன் TSP உரத்தை அனைத்து விவசாய சேவை நிலையங்களுக்கும் விநியோகித்துள்ளதாக அறிவித்துள்ளன.

இதுவரை 38 விவசாயப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு TSP உரங்கள் வழங்கப் பட்டுள்ளன. இதுவரை 67 இலட்சத்து 7ஆயிரத்து 139 விவசாயிகளுக்கு 22 ஆயிரத்து 644 மெற்றிக் தொன் TSP உரம் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

# வைத்தியர் போன்று வேடமிட்டு நிதி மோசடி

வைத்தியர் போல் நடித்து வெளிநாடுகளுக்கு நபர்களை அனுப்புவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட ஒருவர் பொரளை ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு முன்பாக வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பொரளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரிடம் நடத்திய விசாரணையில், அவுஸ்திரேலியாவில் தொழில்வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி, கொழும்பு தேசிய வைத்தியசாலையினுள் வைத்தியர்போல் நடித்து, ஒருவரிடம் 70,000 ரூபாவை பெற்றுக் கொண்டமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் பன்னல பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடையவர் எனவும் அவர் வத்துபிட்டியல பிரதேசத்தில் தற்காலிகமாக வசித்து வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் நேற்று (06) கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அங்கொட லொக்காவின் உதவியாளர் அத்துருகிரிய ஜெரம் கைது

‘அத்துருகிரிய ஜெரம்’ என்ற பாதாள உலகக்குழு உறுப்பினர் விசேட அதிரடிப் படையினரால் அத்துருகிரிய பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப் பட்டுள்ளார்.

ஹோமாகம பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் மற்றும் அத்துருகிரிய பிரதேசத்தில் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டதற்காக இவருக்கு எதிராக பிடியாணை பெறப்பட்டிருந்தது. சந்தேகநபர் அங்கொட லொக்காவின் பிரதான உதவியாளர் எனவும், அவர் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் உறுப்பினர் எனவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

அவர் அத்துருகிரிய நகரில் தங்கியிருப்பதாக விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் (5) பிற்பகல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக அத்துருகிரிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (06.04.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 208.5809 | 222.2199 |
| கனேடியன் டொலர் | 231.0514 | 245.8843 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.7248 | 48.4568 |
| யூரோ | 339.8053 | 359.9918 |
| ஜப்பான் யென் | 2.3827 | 2.5189 |
| சிங்கப்பூர் டொலர் | 234.3993 | 248.9770 |
| ஸ்ரேலிங் பவுன் | 388.4395 | 410.6820 |
| சுவிஸ் பிராங் | 342.9886 | 365.7178 |
| ஐ.அ. டொலர் | 313.2952 | 330.5619 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 851.8661 |
| குவைட் | குவைட் தினார் | 1,046.7175 |
| ஓமான் | ஓமான் றியால் | 834.1769 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.8319 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.6112 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.4445 |

# உயிருக்கு அச்சுறுத்தலான பஸ் பயணம்






**(வவுனியா நிருபர்)**

வவுனியாவிலிருந்து செட்டிகுளம் நோக்கி செல்பவர்கள் தினமும் மாலைநேர இறுதி பஸ்ஸில் போதிய இடவசதி இன்மையால் அப் பஸ்ஸின் பல பகுதிகளிலும் தொங்கிய படியும் பஸ்ஸின் மேல் ஏறியும் உயிருக்கு அச்சுறுத்தலான வகையில் பயணிப்பதை அவதானிக்க முடிகிறது.

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வசிப்பவர்கள் தனியார் வேலைவாய்ப்புகள், சந்தை நடவடிக்கைகள், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள், அரச வேலை என தினமும் பலரும் வவுனியா நகருக்கு வந்து செல்கிறார்கள். இவ்வாறு வந்து செல்பவர்கள் மாலைவேளை நகரிலிருந்து செட்டிகுளம் நோக்கித் திரும்பும்போது போதிய வாகன வசதி இன்மையால் இறுதி பஸ்ஸில் தமது உயிரைக் கையில் பிடித்தபடி பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது.

அதிகமான பயணிகள் காரணமாக பஸ்ஸில் போதிய இடவசதி இன்மையால் பஸ்ஸில் தொங்கியபடியும், அதன் பின்பகுதி, மேற்பகுதி என பல பகுதிகளிலும் உயிருக்கு அச்சுறுத்தலான, ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, குறித்த பகுதிக்கு மாலை நேரத்தில் போதியளவிலான பஸ் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்பதும் பாதிக்கப்பட்டுள்ள பயணிகளின் கோரிக்கையாகவுள்ளது.

# மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் அதிபராக உபைதுல்லாஹ் நியமனம்




– பி.எம்.எம்.ஏ.காதர் –

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் புதிய அதிபராக இப்றாலெப்பை உபைதுல்லாஹ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமையினை 2023-04-07ஆம் திகதி பொறுப்பேற்கின்றார். அதிபராகக் கடமையாற்றிய எம்.ஜே.அப்துல் ஹசீப் ஓய்வு பெறுவதையொட்டி இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முதலாந்தர அதிபரான இப்றாலெப்பை உபைதுல்லாஹ் ஆங்கில மொழியில் புலமை கொண்ட ஒருவராவார். மாணவர்களோடு மிகவும் நெருக்கமான உறவைப் பேணி சிறப்பாகக் கற்பிப்பதில் ஆளுமை கொண்ட நல்லாசான். ஆசிரியர்களுடன் நட்பைப் பேணி அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஆற்றல் கொண்டவர்.

சிரித்த முகத்துடன் எல்லோருடனும் நல்ல நட்பைப் பேணிவருபவர். மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அப்பாடசாலையின் கல்வி அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டி சிறந்த பெறுபேறுகளுக்கு வழிகோலியவர். அது மாத்திரமன்றி, பௌதீக வள அபிவிருத்தியிலும் அக்கறையுடன் செயற்பட்டு நல்ல அடைவுமட்டத்திற்கு வித்திட்டவர். பாடசாலையை அழகுபடுத்துவதில் கலை இரசனையோடு வித்தியாசமான சிந்தனையுடன் மற்றவர்கள் மனம் கவரும் வகையில் செயற்பட்டு பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் பாராட்டுகளைப் பெற்றவர்.

இவர் மருதமுனையைச் சேர்ந்த இப்றாலெப்பை - உம்மு றசீனா தம்பதியின் புதல்வராக 1969-10-20ஆம் திகதி மருதமுனையில் பிறந்தவர். ஆரம்பக்கல்வி முதல் இடைநிலைக் கல்வி வரை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் கற்றவர். உயர்தரத்தில் கலைப்பிரிவில் கற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று 90-91ஆம் கல்வியாண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி தனது உயர்க்கல்வியைக் கற்று சிறப்பு கலைப் பட்டதாரியாக 1995ஆம் ஆண்டு வெளியேறினார். அக்காலப் பகுதியிலேயே ஆங்கில ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து டெலிக் பயிற்சியை 1995ஆம் ஆண்டு முடித்துக்கொண்டார்.

### ஆசிரியர் நியமனம்

1997-01-01ஆம் திகதி ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று வரிப்பத்தாஞ்சேனை மஜீத் புர வித்தியாலயத்தில் கடமையேற்றார். அங்கு ஒரு வருட காலம் கடமையாற்றிய நிலையில், 1998-01-01ஆம் திகதி மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று இங்கு கடமையேற்றார். இங்கு ஆங்கில ஆசிரியராக 12 வருடங்கள் சேவையாற்றினார். இக்காலப்பகுதியில் மாணவர்களின் ஆங்கில மொழி விருத்தியில் தனக்கென ஒரு சிறப்பான இடத்தினைப் பிடித்து ஆங்கில மொழி விருத்தியின் மூலம் மாணவர்களின் பல்வேறு செயற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்துள்ளார். க.பொ.த. சாதாரண தர ஆங்கிலப் பாடத்தில் அதிகூடிய பரீட்சைப் பெறுபேற்று சித்தி வீதத்தினை மாணவர்கள் பெற காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளார்.

### ஆங்கிலம் கற்பித்தல்

க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர் தர வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கில மொழியை மிகவும் சிறப்பாகக் கற்பித்து மாணவர்கள் மத்தியில் நற்பெயரைப் பெற்று மருதமுனை பிரதேசத்தின் ஆங்கில மொழி விருத்தியில் தொடர்ச்சியாக மிகக்கூடிய பங்களிப்புச் செய்து வருகின்றார். இவ்வாறான நிலையில், 2009ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடமாற்றத்தினால் மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் கடமையேற்று கற்பித்தல் பணியை மேற்கொண்ட வேளையிலேயே இலங்கை அதிபர் சேவை தரம் 2 போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 2012-10-03ஆம் திகதி அதிபர் சேவை 2இற்குள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு 2014ஆம் ஆண்டு நிரந்தர சேவைக்குள்ளாக்கப்பட்டு மேற்படி பாடசாலையிலேயே பிரதி அதிபராகப் பொறுப்பேற்றார்.

### பட்டப்படிப்புகள்

இக்காலப்பகுதியிலேயே பிரதி அதிபராகச் செயற்பட்டு பாடசாலையின் கல்வி அபிவிருத்தி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர் முதன்மை வெற்றிகளைப் பெற மிகக்கூடிய முயற்சிகளை மேற்கொண்டு பாடசாலையின் பெயர் தேசிய ரீதியில் பேசப்படுவதற்கு பாடசாலை நிர்வாகத்தோடு இணைந்து மிகக்கூடிய பங்களிப்பைச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர், 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா மற்றும் 2008ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியில் டிப்ளோமா கற்கையையும் பூர்த்திசெய்துள்ளார். அத்துடன், தேசிய கல்வி நிறுவகத்தில் பாடசாலை முகாமைத்துவத்தில் டிப்ளோமா சிறப்புச் சித்தியையும் பெற்றுள்ளார்.

### அதிபர் சேவை

மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய நிலையில், 2019-03-18ஆம் திகதி அதிபராக நியமனம் பெற்றார். இப்பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர் இப்பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்தியிலும், கல்வி அபிவிருத்தியிலும் இப்பாடசாலையின் பெயர் சர்வதேச ரீதியில் பேசப்படுவதற்கும் மிகவும் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளார். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 2019ஆம் ஆண்டு 13 மாணவர்களும், 2020ஆம் ஆண்டு 27 மாணவர்களும், 2021ஆம் ஆண்டு 21 மாணவர்களும், 2022ஆம் ஆண்டு 20 மாணவர்களும் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமை சிறப்புப் பெறுபேறாகும்.

### சிறந்த கல்வி மட்டத்தின் பெறுபேறு

அதேபோன்று க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 2019ஆம் ஆண்டு 76 மாணவர்களும், 2020ஆம் ஆண்டு 60 மாணவர்களும், 2021ஆம் ஆண்டு 73 மாணவர்களும் சிறந்த பெறுபேற்றைப் பெற்று வலயத்தில் முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இம்மாணவர்கள் உயர்தரம் கற்று சிறந்த பெறுபேறுகளுடன் பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குச் சென்றுள்ளனர். இவ்வாறு மாணவர்கள் உயர்ந்த கல்வித்தரத்தை அடைவதற்கு வழிகாட்டியவர் அதிபர் ஐ.உபைதுல்லாஹ். இவருடைய மாணவர்கள் இன்று பல்வேறு மட்டங்களில் உயர் பதவிகளில் தடம்பதித்திருப்பது குறிப்பிடத்தக்கது. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 2020ஆம், 2021ஆம் ஆண்டுகளில் கல்முனை கல்வி வலயத்தில் முதன்மை நிலையைப் பெற்றமைக்காக அண்மையில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் நற்சான்றுப் பத்திரம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

### இணைப் பாடவிதான செயற்பாடுகள்

மாணவர்கள் அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டியில் வலய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பதக்கங்களைப் பெறுவதற்கும் அயராது பாடுபட்டுள்ளார். அத்துடன், சமூக விஞ்ஞானப் போட்டி, ஆங்கில தினப் போட்டி மற்றும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் வலய மட்டம் தொடக்கம் தேசிய மட்டம் வரை சென்று மாணவர்கள் சாதனை படைப்பதற்கு மிகக்கூடிய பங்களிப்பைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### பௌதீக வள அபிவிருத்தி

அல்-ஹம்றா வித்தியாலயத்தின் பௌதீக வள அபிவிருத்தியிலும், கல்வி அபிவிருத்தியிலும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் மூலமாக பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு இப்பாடசாலையை வலயத்தின் முன்னணிப் பாடசாலையாகக் குறிப்பிடக்கூடியதாக மாற்றிய பெருமை அதிபர் இப்றாலெப்பை உபைதுல்லாஹ்வையே சாரும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியும்.

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர்களான ஏ.எல்.மீராமுகைதீன், எஸ்.எல்.அப்துல் றஹீம், டொக்டர் எஸ்.எம்.எம்.உமர் மௌலானா பி.எம்.எம்.பதுறுதீன் ஆகியோருடன் இணைந்து பாடசாலைகளில் கடமையாற்றக் கிடைத்தமை பல்வேறு அனுபவங்களைப் பெற வாய்ப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்கது என அதிபர் உபைதுல்லாஹ் தெரிவித்தார். அத்துடன், முன்னாள் பிரதி கல்விப் பணிப்பாளர் அதிபர் திலகம் மர்ஹூம் ஏ.எச்.எம்.மஜீத், முன்னாள் கல்விப் பணிப்பாளர் மர்ஹூம் எம்.எச்.காதர் இப்றாகீம், ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல் ஆகியோரின் மாணவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அதிபர் ஐ.உபைதுல்லாஹ்வின் கல்விப் பின் புலத்திலும். இவரது முன்னேற்றத்திலும், இவரது பணிகளிலும் பின்னணியில் நின்று செயற்பட்டவரர் இவரது மனைவி முகம்மது இப்றாலெப்பை பௌசுல் இனாயா என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தம்பதிக்கு பாத்திமா சொஹா, சிமாஸ், சிமின் சறா ஆகிய பிள்ளைகளும் உள்ளனர். இவரது அதிபர் சேவை சிறப்பாக அமைய என்றும் எமது பிரார்த்தனைகள்.

# ரஹ்மத் பவுண்டேசனால் முன்னெடுக்கப்படும் பல்வேறு மக்கள் நல வேலைத்திட்டங்கள்








(கோணாவத்தை செய்தியாளர்)

கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான றஹ்மத் மன்சூரின் தலைமையில் இயங்கும் “ரஹ்மத் பவுண்டேசன்” அமைப்பினால் அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களும் சமூக நலப்பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், கல்முனை மற்றும் ஏனைய பிரதேசங்களில் இனங்காணப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளர்களுக்கு பல நிறுவனங்களை ஒருங்கிணைத்து அவற்றின் அனுசரணையிலும் வெளிநாட்டு உயர் ஸ்தானிகராலயங்களின் பங்களிப்புடனும் பல மில்லியன் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் 1000இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வருடாந்தம் வழங்கி வைக்கப்பட்டமை, குழாய்க்கிணறுகள் மற்றும் பொதுக் கிணறுகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளதுடன் பல பாடசாலைகளுக்கு தொழுகைக்கான வுழுச் செய்வதற்கான நீர் தொகுதி அமைப்பு மற்றும் குடிநீர் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைத்தமை, பள்ளிவாசல்களின் மீள் கட்டமைப்புக்காக நிதி வழங்கப்பட்டமை, பிரதேச வைத்தியசாலைகளுக்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருட்கள், மின் பிறப்பாக்கி, கதிரைத் தொகுதிகள் வழங்கப்பட்டமை, தெரிவுசெய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இரு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டமை, கொரோனா மற்றும் மழை வெள்ளப்பெருக்கு காலங்களில் வறிய மக்களை தேடிச் சென்று உலருணவு உதவி புரிந்தமை, இதேவேளை, போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் வகையிலான வேலைத்திட்டங்களை இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்களின் பங்களிப்புடன் ஆரம்பித்து வைத்தமை போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக இவ்வாறான மேலும் பல பணிகளை அம்பாறை மாவட்டத்தில் இவர் முன்னெடுத்து வருகின்றார்.

கல்வி, பொருளாதாரம், வாழ்வாதாரம், விவசாயம், மீன்பிடி, விளையாட்டு, இளைஞர் விவகாரம், வறுமை ஒழிப்பு, குடிநீர், சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், கலாசார விருத்தி போன்ற பல்துறைகளிலும் பல அமைப்புகளுடன் தொடர்பு கொண்டும் வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அரசியல் பிரமுகர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியும் இவ்வாறான மக்கள் பணியாற்றி வருவது பலராலும் பாராட்டப்படுகிறது.

பாடசாலைகள், பாலர் பாடசாலைகளுக்கு உபகரணங்கள் பெற்றுக்கொடுத்து குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்தல், பின்தங்கிய மக்களுக்கு சமூக நலத் திட்டங்களூடாக உதவிகளை பெற்றுக் கொடுத்தல், வாழ்வாதார உதவிகளை வழங்குதல், பொதுக் கிணறுகள் மற்றும் குழாய்க்கிணறுகள் அமைத்தல், விவசாயிகள் மற்றும் மீனவர்களின் தேவைகள் குறித்து ஆராய்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் தொண்டு நிறுவனங்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி உதவிகளை பெற்றுக் கொடுக்கின்றமை, விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், சீருடைகளை பெற்றுக் கொடுத்தல், தொழிற்பயிற்சி மற்றும் வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்துதல், மின்விநியோகம், பாதை புனரமைப்பு, சுயதொழில் ஊக்குவிப்பு, மாதர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றமை, மத ஸ்தானங்களுக்கு பல தேவைகளுக்காக நிதியுதவி பெற்றுக் கொடுக்கின்றமை, புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை போன்றன இவர் தொடர்ச்சியாக செயலுருப்படுத்தி வரும் வேலைத்திட்டங்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நகர திட்டமிடல் அமைச்சராகவிருந்த காலப்பகுதியில் அவருடைய பிரத்தியேக செயலாளராக கடமையாற்றியதுடன், கல்முனையில் தெரு விளக்குகளை ஒளிரச்செய்ததுடன், மின் துண்டிப்பு, நீர் துண்டிப்பு செய்யப்பட்ட மத ஸ்தானங்களுக்கு உதவி செய்ததுடன் யுத்த காலத்தில் பாதிக்கப்பட்டிருந்த வீரச்சோலை, குடுவில், வளத்தாப்பிட்டி, 12ஆம் கொலணி போன்ற பிரதேசங்களில் மத ஸ்தானங்களை மீளப் புனரமைப்புச் செய்ய உதவியமையும் குறிப்பிடத்தக்கதாகும். மர்ஹூம் முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூரின் புதல்வரான இவர், தந்தையின் வழியில் இன, மத, மொழி, பிரதேச வாதங்களுக்கப்பால் மாவட்டம், மாகாணம் தழுவி மக்களுக்கு சேவை செய்யக்கூடிய அரசியல் அதிகாரமிக்க ஒருவராக திகழக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக பலரும் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

(பாலமுனை செய்தியாளர்)

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமும் விழிப்புணர்வு நிகழ்வும் வியாழக்கிழமை(06) பாலமுனையில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாலமுனை பிரதேசத்துக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.பி.மிஹியார், சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.ஐ.ஹைதர் உட்பட அட்டாளைச்சேனை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக்கழக மற்றும் அட்டாளைச்சேனை ஐகோணிக் யூத் அமைப்பின் உறுப்பினர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர், பாலமுனை பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று பரிசோதனைக்குட் படுத்தியதுடன் டெங்கு பரவக்கூடிய வகையில் காணப்பட்ட வீட்டுச் சூழல்கள், வெற்றுக் காணிகளில் காணப்பட்ட பொருட்கள் உடனடியாக அகற்றப்பட்டதுடன், உரிமையாளர்கள் அறிவுறுத்தப் பட்டனர். அதனை மீறி செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி இதன்போது தெரிவித்தார்.

# வெள்ளரிப்பழ விற்பனை அதிகரிப்பு



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக கரையோரப் பகுதிகளிலும் பிரதான வீதியோரங்களிலும் அங்காங்கே வெள்ளரிப்பழ விற்பனை அதிகரித்துள்ளது.

குறிப்பாக சம்மாந்துறை - அம்பாறை பிரதான வீதி, கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியோரங்களில் துவிச்சக்கரவண்டி, மோட்டார்சைக்கிள், முச்சக்கரவண்டிகளில் வெள்ளரிப்பழத்தினை வியாபாரிகள் கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். இதனை பொதுமக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்வதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இம் மாவட்டத்தில் தற்போது நிலவி வருகின்ற வரட்சியான காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள உடல் உஷ்ணத்தை தவிர்ப்பதற்காக இவ்வெள்ளரிப்பழம் உட்பட ஏனைய பழ வகைகளை சாப்பிடுவதில் மக்கள் அதிக நாட்டங்கொண்டு வருகின்றனர்.

இது தவிர, தற்போது அதிக வெப்பம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் வெள்ளரிப்பழத்திற்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன், 150 ரூபா முதல் சுமார் 850 ரூபாவரை இவ்வெள்ளரிப்பழம் சிறியது முதல் பெரியது வரையான பருமனுக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மேற்குறித்த இப்பழவகையானது, பெரும்பாலும் வெப்பமான காலங்களிலேயே அதிகமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான்குளம், செங்கலடி, களுதாவளை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து பெருமளவில் வெள்ளரிப்பயிர்ச்செய்கை பண்ணப்பட்டு வருவதுடன், இவை ஏனைய ஊர்களுக்கு விற்பனைக்காக கொண்டுசெல்லப்படுகின்றன. பனை ஓலையில் மிக பாதுகாப்பாக வெள்ளரிப்பழத்தைக் கட்டி விற்பனையாளர்கள் விற்பனை செய்து வருவதுடன் குறித்த வெள்ளரிப்பழங்களை மக்கள் ஆர்வத்துடன் வாங்கி வருகின்றனர்.

# பெண்கள் காப்பகத்தின் மேல்தளம் அமைக்கும் பணிகள் ஆரம்பம்




(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடியில் இயங்கிவரும் பெண்கள் காப்பகக் கட்டிடத்தின் மேல்தள கட்டிடப் பணிகள் தொடங்கிவைக்கும் நிகழ்வும் இப்தார் நிகழ்வும் புதன்கிழமை (05) பெண்கள் காப்பகத்தில் நடைபெற்றன.

காப்பகத்தின் தலைவி ஆசிரியை சல்மா அமீர் ஹம்ஸா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உலமாக்கள், ஊர்ப் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, கட்டிடத்தின் மேல்தளம் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கியவர்களுக்காக துஆப் பிரார்த்தனை நிகழ்வும் இடம்பெற்றது.

இக்காப்பகமானது கைவிடப்பட்ட மற்றும் பாது காப்பற்ற பெண்கள், யுவதிகளைப் பாதுகாத்து அவர் களுக்கான வாழ்க்கை முன்னேற்ற வழிகாட்டல் வழங்கும் நோக்கில் செயற்பட்டுவரும் இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண்கள் காப்பகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பஹ்ரியாவின் பவளவிழா உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைப்பு



(மாளிகைக்காடு, சம்மாந்துறை செய்தியாளர்கள், பாறுக் ஷிஹான்)

கல்முனை கல்வி வலய அல்-பஹ்ரியா மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) பவளவிழா நிகழ்வுகளை உத்தியோகபூர்வமாக தொடக்கி வைக்கும் நிகழ்வும், இப்தார் வைபவமும் பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைஸால் தலைமையில் புதன்கிழமை(05) பாடசாலையில் நடைபெற்றது. உத்தியோகபூர்வ பவளவிழா இலச்சினையை திறந்துவைத்த பாடசாலை சமூகம் இந்த இலச்சினையை பவள விழா இலச்சினையாக அறிவித்துள்ளது.

மேலும் இவ்வருடம் முழுவதுமாக நோன்புப் பெருநாளையடுத்து இரத்ததான முகாம்கள், பழைய மாணவர்களின் அணிகள் பங்குகொள்ளும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி, கலை, கலாசார நிகழ்வுகள், பிரமாண்ட பரிசளிப்பு, மேலங்கி அறிமுகம், சாதனையாளர் கௌரவிப்பு, பழைய மாணவிகளின் நிகழ்வுகள் என பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்களான எம்.ஏ.அஸ்தர், ஏ.எஸ்.சலாம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் எஸ்.எல். ஹமீட், பழைய மாணவர் அமைப்பின் செயலாளர் எம்.ஐ.எம்.ஜிப்ரி, பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# அபராதம் விதிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலை வீதியில் அனுமதிப்பத்திரமின்றி சாராய விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு 10ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரமின்றி 180 மில்லி லீற்றர் நிறையுடைய சாராயத்தை 300 ரூபாவிற்கு விற்பனை செய்தமை மற்றும் 180 மில்லி லீற்றர் அடங்கிய ஒரு சாராயப்போத்தலை தன்வசம் வைத்திருந்த குற்றங்களுக்காக அக்கரைப்பற்று பொலிஸார் நபர் ஒருவரை கைதுசெய்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை (06) ஆஜர்படுத்தியபோது முதலாவது குற்றத்திற்காக 5 ஆயிரம் ரூபாவும், இரண்டாவது குற்றத்திற்காக 5 ஆயிரம் ரூபாவும் மொத்தமாக 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# திருகோணமலை நகரசபை தரமுயர்த்தப்பட்டபோதும் அந்த நடைமுறைகள் இன்னும் பின்பற்றப்படவில்லை

## நகர சபைச் செயலாளர் ராஜசேகர்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை நகரசபை, மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டபோதும் உத்தியோக பூர்வமாக மாநகர சபையாக செயற்படத் தொடங்கவில்லை. அவ்வாறு செயற்படுவதற்குரிய விதிமுறைகள் நிறைவேற்றப்பட்ட பின்பே மாநகர சபையாக இயங்க முடியும் என திருகோணமலை நகர சபையின் செயலாளர் வெள்ளையன் ராஜசேகர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி அமைச்சினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் கடந்த மார்ச் 20ஆம் திகதி முதல் திருகோணமலை நகரசபை தர முயர்த்தப்பட்டபோதும் அந்த நடைமுறைகள் இன்னும் பின்பற்றப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாநகர சபையின் செயற்பாடுகள் குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிடுகையில், 09.09.2022ஆம் திகதியிடப்பட்ட 2296 37 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருகோணமலை நகர சபை மார்ச் 20ஆம் திகதி முதல் உள்ளூராட்சி அமைச்சினால் மாநகர சபையாக தரம் உயர்த்தப்பட்டபோதும் உத்தியோகபூர்வமாக அது இன்னும் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை.

மாநகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் சபை கூடி அச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்பே தரமுயர்த்தல் உத்தியோகபூர்வமானதாக ஏற்றுக் கொள்ளப்படும். அதன்பின்பே மாநகர சபை அந்தஸ்து உறுதிப்படுத்தப்படுவதுடன் அதன் விதிகள், சட்டங்கள், நடைமுறைகள் அமுல்படுத்தப்படும். உள்ளூராட்சி தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டதன் காரணமாக மாநகர சபை தரமுயர்வு அமுல்படுத்தப்படவில்லை. திருகோணமலை மாநகர சபைக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்ட கட்சி வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். தேர்தல் முடிந்து ஆட்சி அமைப்பு தீர்மானிக்கப்பட்டு முதலாவது அமர்வின்போது மாநகர சபைக்கான தீர்மானம் நிறைவேற்றப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோதமான சாராயம் வைத்திருந்த நபர் கைது

(கந்தளாய் செய்தியாளர்)

சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் வடிசாராயம் வைத்திருந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வெருகல், மாவடிசௌசேனை பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய சந்தேக நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது வீட்டில் சட்டவிரோதமான முறையில் சாராயத்தினை மறைத்துவைத்திருந்த நிலையில், பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின்படி, தேடுதல் மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபரிடமிருந்து 5 போத்தல் சாராயத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை வியாழக்கிழமை மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது 90ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் அதனை செலுத்தத் தவறும்பட்சத்தில் ஒரு மாதகால சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

# எருமை மாடுகளை கடத்திச்சென்ற நபர் கைது

(கனகராசா சரவணன்)

பொலன்னறுவை கிரித்தலை பிரதேசத்திலிருந்து காத்தான்குடி பிரதேசத்திற்கு சட்டவிரோதமாக லொறி ஒன்றில் எருமை மாடுகளை கடத்திச்சென்ற ஒருவரை காத்தான்குடி கடற்கரை வீதியில் வைத்து வியாழக்கிழமை (06) அதிகாலை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

இதன்போது 6 எருமை மாடுகள் உட்பட லொறி ஒன்றையும் மீட்டு ஒப்படைத்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் டிலங்கவெலவின் ஆலோசனையில் சப்இன்ஸ்பெக்டர் ஆர்.எம்.ஆர்.சதுரங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவதினம் அதிகாலை காத்தான்குடி கடற்கரை வீதியில் வைத்து குறித்த லொறியை மடக்கிப்பிடித்து சோதனையிட்டனர்.

இதன்போது, லொறியில் சட்டவிரோதமாக 6 எருமை மாடுகளை கடத்திச் செல்வதை கண்டுபிடித்து லொறியின் சாரதியை கைது செய்ததுடன், 6 மாடுகளையும் லொறியையும் மீட்டு ஒப்படைத்துள்ளனர். இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தண்டப்பணம் விதிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரம் மற்றும் ரிப்பர் வாகன உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரம் இரண்டையும், ரிப்பர் வாகனமொன்றையும் அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை (06) ஆஜர்படுத்தியபோது ஏலவே முன் குற்றம் இருந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் மற்றைய உழவு இயந்திரத்திற்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டதுடன் ரிப்பர் வாகனத்திற்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது.

குறித்த தண்டப்பணம் வாகன உரிமையாளர்களினால் செலுத்தப்பட்டதுடன் வாகனமும் விடுவிக்கப்பட்டது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**அடுத்தவருடம் 2024, நவம்பர் வரை ரணிலுக்கு ஜனாதிபதி தேர்தல நடத்த அரசியலமைப்பில் இடமில்லையாம் எண்டு இப்ப கதைக்கிறாங்க எலுவா? பின்கதவால கோட்டா இரண்டுவருடம் முடியமுன்னம் வந்தவருக்கு மெய்யா மெய்யா இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்த ஏலாதுதான். அதுக்குத்தான் இப்ப இந்தியாவுக்கு போய் மாகாணசப தேர்தலயாவது நடத்த தாம் தயார் எண்டு கத உட்டு சமாளிக்கபோகப்போறாரு போலநரி. தமக்கு என்ன வாசியோ அத மட்டும்தான் பாக்கும்!**

# குண்டும் குழியுமாக காணப்படும் வீதியை புனரமைத்துத்தரக் கோரிக்கை

(எருவில் செய்தியாளர்)



மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள முக்கியமான வீதிகளில் ஒன்றாகக் காணப்படும் பட்டிருப்பு பாலத்திலிருந்து வக்கிஎல்ல வரையுமான வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாக சேதமடைந்து காணப்படுவதால் அவ்வீதியை அன்றாடம் பயன்படுத்தும் பொதுமக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு ஆளாகி வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியானது மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுவதனால் அன்றாடம் இவ்வீதியைப் பயன்படுத்தும் அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் விவசாயிகள் உரிய நேரத்திற்கு கடமைக்கு சமுகமளிக்க முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

முற்றிலும் விவசாயப் பிரதேசத்திலுள்ள இவ் வீதி சேதமடைந்து காணப்படுவதனால் விவசாயிகள் தமக்கு வேண்டிய விதை நெல் மற்றும் உரம் அத்துடன், விவசாய உற்பத்திப் பொருட்களை கொண்டுசெல்லவும் சந்தைப்படுத்தவும் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

இவை தவிர, அவசர தேவையின் நிமித்தம் நோயாளர்களை வைத்தியசாலைகளுக்கு கொண்டுசெல்ல வாடகைக்கமர்த்தும் வாகனங்களுக்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் உள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் இவ் விடயத்தினை கவனத்திற்கொண்டு பாதையை சீரமைத்து தர வேண்டும் என பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# திருகோணமலை பொது வைத்தியசாலையில் சக்கர நாற்காலிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு

## உடைந்த துண்டுகளைப் பொருத்தி பயன்படுத்திவரும் சிற்றூழியர்கள்



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நோயாளர்கள் அனுமதிக்கும் இடத்தில் நோயாளர்களை ஏற்றிச்செல்லும் சக்கர நாற்காலிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைகளிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக அதிகளவிலான நோயாளர்கள் இவ்வைத்தியசாலைக்கு அழைத்து வரப்படுகின்றனர். இந்நிலையில், நோயாளர்கள் அனுமதிக்கும் இடத்தில் பத்துக்கும் மேற்பட்ட சக்கர நாற்காலிகள் தேவைப்படுகின்ற போதிலும் தற்போது இருக்கின்ற அனைத்து சக்கர நாற்காலிகளும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதுடன், உடைந்தும் காணப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பாக குறித்த பிரிவில் கடமையாற்றும் ஊழியர்கள் தங்களது மேற்பார்வையாளர்களிடம் முறையிட்டபோதிலும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் புதிய சக்கர நாற்காலிகளை வழங்குவதற்கு நிதி வழங்கப்படவில்லை என குறிப்பிட்டனர். இருந்தபோதிலும் உடைந்த நிலையில் இரும்புக்காக விற்பனை செய்யப்படவிருந்த குறித்த சக்கர நாற்காலிகளை களஞ்சியசாலையிலிருந்து பெற்றுக்கொண்டு தங்களுடைய முயற்சியினால் குறித்த பிரிவிற்கு பொறுப்பாக இருக்கின்ற சிற்றூழியர்கள் அவற்றை திருத்தி, நிறம் பூசி பயன்படுத்தி வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், நோயாளர்களுக்கு தேவையான சக்கர நாற்காலிகளும் தட்டுப்பாடாகவே காணப்படுகின்றன.

நோயாளர்களின் நலன் கருதி எம்மால் இயன்ற சேவையை வழங்க வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டோம் என திருகோணமலை பொது வைத்தியசாலையில் பணியாற்றும் சிற்றூழியர்கள் தெரிவித்தனர்.

# புகையிரதக் கடவை ஊழியர்களின் வேலையை நிரந்தரமாக்கக் கோரி கவனயீர்ப்புப் போராட்டம்



(கல்குடா, கிரான், வாழைச்சேனை, கல்லடி செய்தியாளர்கள்)

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக ரூபா 250இற்கு சேவையாற்றும் தங்களுக்கு இனியும் காலந்தாழ்த்தாது புகையிரத திணைக்களத்தினுள் நிரந்தர நியமனம் தருமாறு கோரி பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை ஊழியர்கள் வியாழக்கிழமை (06) வாழைச்சேனை புகையிரத நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை புகையிரத நிலையத்தில் ஒன்றுகூடியவர்கள் தங்களது கோரிக்கை அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி வாழைச்சேனை - கொழும்பு பிரதான வீதி வழியாக ஊர்வலமாக நடந்து வந்து பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நின்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"அரசே நிரந்தர நியமனத்தை தா, சம்பளத்தினை அதிகரித்து தா'' என்ற கோரிக்கை அடங்கிய கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை தீர்வு பெற்றுத் தருமாறு கோரி முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் மற்றும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஆகியோரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். மகஜரை பெற்றுக்கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், சம்பந்தப்பட்ட போக்குவரத்து அமைச்சர் மற்றும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு தெரியப்படுத்தி தீர்வினை பெற்றுத்தருவதாக தெரிவித்தார். மேற்படி பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை ஊழியர்கள் வாழைச்சேனை பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பான 26 புகையிரதக் கடவையில் 78 பேர் வரை கடமை புரிந்து வருகின்றனர்.

இவர்கள் கடந்த 2013.07.11ஆம் திகதி சேவைக்கால அடிப்படையில் பொலிஸ் திணைக்களத்தினால் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். நாளொன்றுக்கு எட்டு மணித்தியாலம் பணியாற்றி மாதாந்த சம்பளமாக ரூபா 7ஆயிரத்து 500 ரூபா பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருகிறது. இன்றைய விலைவாசி அடிப்படையில் இதனைக்கொண்டு தங்களது வாழ்வாதாரத்தினை மேற்கொள்ளமுடியாது என்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன், ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் குறித்த பணிக்கு அமர்த்த நடவடிக்கை முன்னெடுப்பதாகவும் இதனால் தங்களது கடமைக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் தங்களையும் குறித்த கடமைக்கு முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கி பணியமர்த்தி தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கடும் வெப்பம் காரணமாக கிழக்கில் மக்கள் அவதி

(பாண்டிருப்பு செய்தியாளர்)

கிழக்கில் அதிக வெப்பம் நிலவி வருவதால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் அதிக வெப்பத்தினால் சிறுவர்கள், முதியவர்கள் உட்பட பலரும் வெப்பத்தினால் உண்டாகும் தொற்று நோய்களுக்கும் ஆளாகிவருகின்றனர்.

இதனால் வயிற்றோட்டம், தோல்நோய்கள், தலையிடி, காய்ச்சல், மஞ்சள் காமாலை போன்ற நோய்களினால் பாதிக்கப்படும் மக்கள் பிரதேச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று செல்கின்றனர். இதேவேளை, டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் இருப்பதனால் பொதுமக்கள் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

நிலவும் வெப்பத்தை தணித்துகொள்வதற்காக மக்கள் குளிர்பான கடைகளை நோக்கிச் செல்கின்றனர். இங்குள்ள பிரதான வீதிகளில் இளநீர், நுங்கு, வெள்ளரிப்பழம், சர்பத் போன்ற தாகம் தீர்க்கும் நடமாடும் வியாபார விற்பனை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புதிய ஆசிரியர் நியமனத்தை இரத்துச்செய்க! வாழைச்சேனையில் கவனயீர்ப்புப் போராட்டம்



(வாழைச்சேனை செய்தியாளர்)

கல்குடா வலயக்கல்வி அலுவலகப் பிரிவிலுள்ள வாழைச்சேனை இந்துக் கல்லூரி தேசிய பாடசாலைக்கு ஆசிரியராக புதிதாக நியமனம் பெற்றுவரும் ஆசிரியரின் நியமனத்தை தற்காலிகமாக இரத்துச்செய்யுமாறு வலியுறுத்தி செவ்வாய்க்கிழமை(04) கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினர் ஒன்றிணைந்து இக்கவனயீர்ப்புப் போராட்டத்தினை மேற்கொண்டனர். பாடசாலை முன்றலில் ஒன்றுகூடியவர்கள் ''பொருத்தமான ஆசிரியரை நியமனம் செய், பொ.உதயரூபன் எமக்கு வேண்டாம், தற்காலிக நியமனத்தை இரத்துச்செய், 16 பாடசாலைகள் வெளியேற்றிய ஆசிரியர் வேண்டாம்'' என்பன போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் இறுதியில் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளித்தனர்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி, உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன் அவர்களிடமிருந்த 20 மில்லி கிராம் ஹெரோயினையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை(06) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்



**அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தராக ஒலுவிலைச் சேர்ந்த ஏ.இம்றுபாஸ்கான் நியமிக்கப்பட்டுள்ளார்.**

**கடந்த மார்ச் மாதம் தொடக்கம் செயற்படும் வகையில் ஏ. இம்றுபாஸ்கான் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளரினால் வருடாந்த இடமாற்றத் திட்டத்திற்கமைவாக அட்டாளைச்சேனை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

**கடந்த ஏழு வருடங்களாக விளையாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றிவரும் இவர் நிந்தவூர் மற்றும் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவுகளில் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.**

**(அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)**

# மே 06இல் பிரித்தானிய மன்னர் 3ஆம் சார்ள்ஸின் முடிசூட்டு விழா




பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழா எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறும் என பெக்கிங்ஹாம் அரண்மனை உறுதிப்படுத்தியுள்ளது.

பிரித்தானிய ராணி 2ஆம் எலிசபெத் கடந்த ஆண்டு உடல்நலக் குறைவால் காலமானார். இதையடுத்து பிரித்தானியாவின் புதிய மன்னராக மூன்றாம் சார்ள்ஸ் கடந்த ஆண்டு அரியணை ஏறினார். அவர் அரியணையில் ஏறினாலும் அதிகாரப்பூர்வ முடிசூட்டு விழா நடைபெறாமல் இருந்தது. இந்நிலையில், மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறும் என பெக்கிங்ஹாம் அரண்மனை உறுதிப்படுத்தியுள்ளது.

முடிசூட்டு விழாவின்போது பாரம்பரிய மரபுப்படி கையில் செங்கோல், தடி ஆகியவற்றை ஏந்தி மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் அரியணையில் அமர்வார். மூத்த மதகுருமார்களால் புனிதப்படுத்தப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்ட பின்னர், மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்கு புனித எட்வர்டின் கிரீடம் சூட்டப்படும். அதன்பின் பெக்கிங்ஹாம் அரண்மனையின் பெல்கனியில் இருந்தபடி நாட்டு மக்களுக்கு சார்ள்ஸ் உரையாற்றுவார். அதே தினத்தில் பிரித்தானிய ராணியாக கமீலா பார்க்கர் முறைப்படி அறிவிக்கப்படுவார். மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவை முன்னிட்டு அவருக்கு கௌரவம் சேர்க்கும் வகையில், மே 8ஆம் திகதி வங்கி விடுமுறையாக இருக்கும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில், மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் முடிசூட்டு விழாவில் பங்கேற்க இளவரசர் வில்லியம், அவரது மனைவி கேட், மற்றொரு இளவரசர் ஹாரி மற்றும் அவரது மனைவி மேகன் மார்கலே ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி விழாவில் பங்கேற்க உலகம் முழுவதுமுள்ள சுமார் 2 ஆயிரம் பிரபலங்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்படவுள்ளன. முடிசூட்டு, பதவியேற்பு விழா மே 6ஆம் திகதி வெஸ்ட்மினிஸ்டர் பகுதியிலுள்ள அபே தேவாலயத்தில் விமரிசையாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக செய்திகள்

# உணவு - தண்ணீரின்றி மோல்ட்டா கடற்பகுதியில் தவித்த புலம்பெயர்ந்தோர் பத்திரமாக மீட்பு



மோல்ட்டா சர்வதேச கடற்பகுதியில், நடுக்கடலில் சிக்கித் தவித்த 400இற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தோர் 11 மணி நேர போராட்டத்துக்கு பின்னர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சிரியா, பாகிஸ்தான், சோமாலியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோர், ஏப்ரல் முதலாம் திகதி கிழக்கு லிபியாவிலிருந்து இத்தாலி நோக்கி படகில் புறப்பட்ட நிலையில், இரண்டு நாட்களாக உணவு, தண்ணீரின்றி நடுக்கடலில் தவித்துள்ளனர்.

கடற்பகுதி சீற்றத்துடன் காணப்பட்டதால் தனியார் தொண்டு நிறுவனத்தினர் Geo Barents கப்பல் மூலம் 8 பெண்கள், 30 குழந்தைகள் உட்பட 440 பேரை பத்திரமாக மீட்டனர். கடந்த ஓராண்டில் வட ஆபிரிக்காவிலிருந்து 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இத்தாலிக்கு புலம் பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ட்ரம்ப் மீதான அவதூறு வழக்கு தள்ளுபடி: ரூ. ஒரு கோடி வழங்க நடிகை ஸ்டார்மிக்கு உத்தரவு



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது ஆபாச பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ் தொடுத்த அவதூறு மேன்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்த நீதிமன்றம், ட்ரம்புக்கு ரூ. ஒரு கோடி (இந்திய ரூபாப்படி) வழங்க உத்தரவிட்டது.

ட்ரம்ப் உடனான தொடர்பு குறித்து வெளியில் தெரிவிக்கக்கூடாது என தனக்கு மர்ம நபர்கள் மிரட்டல் விடுத்ததாக ஆபாச பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ் குற்றஞ்சாட்டியிருந்தார். இதற்கு ட்ரம்ப் மறுப்புத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக, கடந்த 2018ஆம் ஆண்டு ட்ரம்ப் மீது ஸ்டார்மி அவதூறு வழக்கு தொடுத்தார். இதை தள்ளுபடி செய்த நீதிமன்றம், ரூ.2.4 கோடி அபராதம் விதித்தது. இதை எதிர்த்துத் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிமன்றம், ஸ்டார்மிக்கு மேலும் ரூ.2 கோடி அபராதம் விதித்தது.

இதை எதிர்த்து கலிபோர்னியாவிலுள்ள 9ஆவது சர்க்யூட் கோர்ட் அப்பீல்ஸில் ஸ்டார்மி மேன்முறையீடு செய்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், ஸ்டார்மி மனுவை தள்ளுபடி செய்தது. அத்துடன், மேன்முறையீட்டு செலவாக ட்ரம்புக்கு ரூ. ஒரு கோடி வழங்க உத்தரவிட்டது.

நடிகை ஸ்டார்மியுடன் தொடர்புடைய மற்றொரு வழக்கில் ட்ரம்ப் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட அதே நாளில் இந்தத் தீர்ப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய கண் சொட்டு மருந்தால் 3 பேர் பலி; 8 பேருக்கு கண்பார்வை இழப்பு



இந்திய மருந்து நிறுவனம் தயாரித்த கண் சொட்டு மருந்தைப் பயன்படுத்திய 3 பேர் உயிரிழந்ததாகவும், 8 பேரின் கண் பார்வை பறிபோயுள்ளதாகவும் அதிர்ச்சிகரமான குற்றச்சாட்டை அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் முன்வைத்துள்ளது.

ஏற்கனவே இந்தியாவில் தயாரிக்கப்படும் இருமல் மருந்துகள் மீது இதேபோன்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 2 இருமல் மருந்துக்கு உலக சுகாதார அமைப்பு தடை விதித்திருந்தது. இந்நிலையில், கண் பார்வை பறிபோக காரணமான சொட்டு மருந்து தயாரிப்பை நிறுத்துமாறு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. இந்திய சுகாதாரத்துறைக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்துள்ள சுகாதாரத்துறை அமைச்சு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கண் சொட்டு மருந்துகளின் மாதிரிகள் பக்டீரியா மாசுபாடு கண்டறியப்படவில்லை என மறுத்துள்ளது. தரக்கட்டுப்பாட்டு செயன்முறை விதிகளின்படி கண் சொட்டு மருந்துகள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், அமெரிக்காவின் குற்றச்சாட்டை சுகாதாரத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

தங்கள் நிறுவனத்தின் கண் சொட்டு மருந்து மீதான குற்றாட்டு எழுந்தது கடந்த பெப்ரவரி மாதமே. மருந்து தயாரிப்பதை தாமதமாக நிறுத்திவிட்டது. இந்நிலையில், மருந்து நிறுவனத்தின் மீதான விசாரணை நடைபெற்று வருவதால் விசாரணை முடியும் வரை இந்த நிறுவனத்தில் கண் சொட்டு மருந்து உட்பட கண் பராமரிப்பு தொடர்பான எவ்வித மருந்தும் தயாரிக்கப்படாது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சூறாவளியில் சிக்குண்டு அமெரிக்காவில் 5 பேர் பலி



அமெரிக்காவின் தெற்கு மிசவுரியில் வீசிய சூறாவளிக்கு 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சூறாவளியில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால் அறுந்து வீழ்ந்த மின்கம்பிகளை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

பாதிக்கப்பட்ட 87 கட்டடங்களில் 12 கட்டடங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டன. Peoria வின் தென்மேற்கேயுள்ள இல்லினாய்ஸிலுள்ள பிரையன்ட்டை மற்றொரு சூறாவளி தாக்கியது, இதில் பலர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்ட நிர்வாகத்தில் 30இற்கும் மேற்பட்ட ஊழல்கள்



இலங்கை உதைபந்தாட்ட (FSL) நிர்வாக மற்றும் நிதி பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு 2012 மற்றும் 2022 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 30இற்கும் மேற்பட்ட ஊழல் சம்பவங்களைக் கண்டறிந்துள்ளதாக விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தன தலைமையிலான ஐவரடங்கிய குழு, கால்பந்தாட்ட அபிவிருத்திக்காக பெறப்பட்ட மானியத்தில் இரண்டு வீதமே விளையாட்டு மற்றும் வீரர்களுக்காக செலவிடப்பட்டுள்ளதாகக் கண்டறிந்துள்ளனர். மலேசியா சுற்றுப்பயணத்தில் மட்டும் 100 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊழலில் ஈடுபடும் இலங்கை நிர்வாகிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்கப்போவதில்லை என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் கண்டிப்பாக தண்டிக்கப்படுவார்கள் என்றும் எதிர்காலத்தில் அவர்கள் கால்பந்து நிர்வாகத்தில் பதவிகளை வகிக்க அனுமதிக்கப்பட மாட்டார்க என்றும் விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் ரணசிங்க தெரிவித்தார்.

ஒரு மாதத்திற்குள் முடிக்கப்பட்ட 249 பக்க விசாரணையின் சுருக்கம் அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது.

முழுமையான அறிக்கையை ஆராய்ந்து வருவதாகவும் விரைவில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாராளுமன்றத்திடம் கையளிக்கவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

முன்னாள் கால்பந்து நிர்வாகிகள் உலக அமைப்பான பீபாவை தவறாக வழிநடத்தியதாக அமைச்சர் ரணசிங்க குற்றஞ்சாட்டினார், இதன் விளைவாக ஜனவரி மாதம் விளையாட்டின் உலக நிர்வாகக் குழுவில் உறுப்பினரிலிருந்து இலங்கை இடைநிறுத்தப்பட்டது.


இலங்கையின் உதைபந்தாட்ட நிர்வாகத்தின் உண்மையான நிலையை சர்வதேச அமைப்பிற்கு தெரியப்படுத்துவதற்காக இந்த அறிக்கை பீபா விடம் சமர்ப்பிக்கப்படும் என்றார்

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com




## இலங்கையுடனான ஒப்பந்தத்தை நீடித்தது சொனி




இலங்கை கிரிக்கெட் போட்டிகளை அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு மார்ச் 2027 வரை ஒளிபரப்பும் ஒப்பந்தத்தை Sony Pictures Networks India (SPNI) நீடித்தது.

இலங்கை அணி இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள், அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் போன்ற அணிகளை அவர்களது சொந்த மைதானத்தில் சந்திக்கிறது. ஏப்ரல் 16, 2023 முதல் இரண்டு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரில் அயர்லாந்தை எதிர்கொள்ளும் இந்தியா, 2024 மற்றும் 2026இல் இலங்கையை அவர்களது சொந்த மைதானத்தில் எதிர்கொள்ளத் தயாராகும். இரண்டு வருட இடைவெளிக்குப் பிறகு, தி மென் இன் ப்ளூ ஜூலை 2024இல் இலங்கைக்கு எதிராக மூன்று ODIகள் மற்றும் மூன்று T20I போட்டிகளில் விளையாடும்.

இலங்கை கிரிக்கெட்டுடனான கூட்டு நீட்சியுடன், SPN இப்போது இங்கிலாந்து, வேல்ஸ், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் ஒளிபரப்பு உரிமையைப் பெற்றுள்ளது.



## நிசங்கவின் பற்றை உடைத்த மில்னே



இலங்கை, நியூசிலாந்து ஆகியவற்றுக்கிடையேயான இரண்டாவது ரி20 போட்டி மார்ச் 5ஆம் திகதி நடைபெற்றபோது இலங்கென முதலில் துடுப்பெடுத்தாடியது.

இலங்கைக்கு எதிராக முதல் ஓவரை ஆடம் மில்னே வீசினார். அதிரடியான வேகத்தில் பந்து வீசக்கூடிய அவர், இந்தப் போட்டியில் புதிய பந்தில் சற்று கூடுதலான வேகத்தில் வீசி ஆரம்பத்திலேயே இலங்கை வீரர் நிசங்கவின் பற்றை இரண்டாக உடைத்தார்.

4 ஓவர்களில் 26 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 5 விக்கெட்டுகளை சாய்த்த ஆடம் மில்னே சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் இலங்கைக்கு எதிராக சிறந்த பந்து வீச்சை பதிசெய்தவர் என்ற புதிய வரலாற்றுச் சாதனை படைத்தார்.

1. அடம் மில்னே : 5/26, 2023
2. ஓசினோ தோமஸ் : 5/28, 2020
3. ரவிச்சந்திரன் அஸ்வின் : 4/8, 2016
4. ஜோஸ் ஹேசல்வுட் : 4/12, 2022

ஐந்து விக்கெட்டுகளை எடுத்து சாதனையுடன் முக்கிய பங்காற்றிய ஆடம் மில்னேக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

## மெனுவல் புர்கா சியோனுக்கு வாழ்நாள் தடை



பெருவியன் கால்பந்து சம்மேளனத்தின் (ஃப்ப்ஃப்) முன்னாள் தலைவர் மனுவல் புர்கா சியோன் அனைத்து கால்பந்து தொடர்பான நடவடிக்கைகளிலிருந்தும் வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளார் மற்றும் CHF1 மில்லியன் (887,000/$1.1 மில்லியன்/1 மில்லியன்) செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அவர் லஞ்ச திட்டங்களில் பங்கேற்று, தேவையற்ற நிதி அனுகூலங்களை ஏற்றுக்கொண்டார் என்று பீபாவின் சுயாதீன நெறிமுறைகள் குழுவின் நீதிபதிகள் குழுவால் அவர் குற்றஞ்சாட்டப்பட்டார்.

2002 முதல் 2014 வரை FPFக்கு தலைமை தாங்கிய Burga Seoane, தென் அமெரிக்க கால்பந்து கூட்டமைப்பு செயற்குழு மற்றும் பீபா மேம்பாட்டுக் குழு ஆகிய இரண்டிலும் முன்னாள் உறுப்பினராகவும் உள்ளார்.

வாழ்நாள் தடை உடனடியாக அமலுக்கு வருகிறது மற்றும் நெறிமுறைகளின்படி அடுத்த 60 நாட்களுக்குள் மைதானம் பற்றிய அறிவிப்பு Burga Seoane க்கு அறிவிக்கப்படும்.

2015ஆம் ஆண்டில் பீபாவில் ஊழல் தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக மனுவல் புர்கா சியோன் கைதுசெய்யப்பட்டார்.

ஜூலை 2015இல் நடத்தப்பட்ட காங்கிரஸின் மேற்பார்வைக் குழுவின் ஆரம்ப நிதி அறிக்கை, சொத்து மற்றும் சொத்துகள் பர்கா சியோனின் குடும்ப உறுப்பினர்களுக்கு கையொப்பமிடப்பட்டதை வெளிப்படுத்தியது.

நவம்பர் 2019இல், கோபா அமெரிக்கா மற்றும் லிபர்டடோர்ஸ் கிண்ணத்தின் வணிக உரிமைகளுடன் தொடர்புடைய லஞ்சமாக பர்கா சியோன் $6.6 மில்லியன் (5.3 மில்லியன்/6 மில்லியன்) பெற்றதாக அல்லது வாக்குறுதியளிக்கப்பட்டதாக "மிகப்பெரும் சான்றுகள்" இருப்பதாக பீபா முடிவு செய்தது.

Burga Seoane தடைகளை CAS க்கு மேனமுறையீடு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7